Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 15 ஆம் நாள் | ஜ. அவ்வல் 20 | (31-10-61) | செவ்வாய்க்கிழமை | இதழ் 222

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# 16 இலங்கை யாத்ரிகர் மாண்டனர்

## வடஇந்தியாவில் கோர ரயில் விபத்து

### 61 பேர் காயம்; 47 பேர் நிலைமை அபாயம்

பம்பாய், அக். 30

வடஇந்தியாவில் ஆக்ராவிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ள சிம்லா என்ற இடத்துக்குச் சமீபத்தில் நேற்றுப் பிரயாணிகள் ரயில் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் மாண்டனர். 61 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 47 பேர்களின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மாண்டவர்களில் 16 பேர் இலங்கை யாத்திரிகர்கள் இவர்களில் பெரும்பாலோர் பௌத்த பிக்குகள்.

ரயில் விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுபற்றி வடரயில்வே அதிகாரியொருவர் விசாரணை நடத்த அனுப்பப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த இடத்துக்கு இந்திய ரயில்வே மந்திரி ஷாநவாஸ்கான் சென்று பார்வையிட்டார். அவருடன் வடபகுதி ரயில்வே ஜெனரல் மனேஜரும் சென்றார்.

**45 இலங்கை யாத்திரிகர்கள்**

வடஇந்தியாவிலுள்ள பௌத்த ஸ்தலங்களைத் தரிசிப்பதற்குச் சென்ற 45 இலங்கை யாத்திரிகர்களும் விபத்துக்குள்ளான ரயிலில் என்ஜினுக்கு அடுத்ததாகவிருந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியிலிருந்தனர்.

என்ஜின் சாரதியும் உதவியாளரும் ஸ்தலத்திலேயே மாண்டனர்.

**இலங்கை அதிகாரிகள்**

விபத்து நடைபெற்ற இடத்துக்கு இந்தியாவிலுள்ள இலங்கை தூதராலயத்தைச் சேர்ந்த இரு உயர்தர அதிகாரிகளை அனுப்பப்போவதாக இலங்கை ஹைகமிஷனர் சேர் ரிச்சார்ட் அலுவிஹாரை தெரிவித்தார்.

விபத்தினல் மரணமடைந்த 16 இலங்கையர்களின் சடலங்களும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**முதன்மந்திரி அனுதாபம்**

ரயில் விபத்துக்கு உத்தரபிரதேச முதன்மந்திரி திரு. ஸி. டி. குப்தா கவலை தெரிவித்தார். விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு அவர் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டார்.

அதிக பிரயாணிகளை ஏற்றியதான

# மோட்டார் வான் வழக்கில் எதிரி விடுதலை

## பொலிசார் அப்பீல் செய்கின்றனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாக தனிப்பட்ட 'மோட்டார் வான்' கார்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் 'வான்' சாரதியை யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் நேற்று விடுதலை செய்தார்.

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி 50 'வான்' சாரதிகள் மீது யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். டி ஜி. பீட்டர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதில் ஒருவழக்கை பரீட்சார்த்தமாக நீதிபதி விசாரணைக்கு எடுத்திருந்தார்.

குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக ஆறுபேர்களை ஏற்றிச் சென்றதாக தம்புவிக்கிரம சிங்கம் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பிராசிக்கியூஷன் தரப்பில் இன்ஸ்பெக்டர் பீட்டர் ஆஜரானர்.

எதிரியின் சார்பில் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், ஜிம்மி ராஜரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எம். சிவசிதம்பரம் ஆஜரானர்.

விசாரணை முடிந்து நேற்றுத் தீர்ப்புக் கூறப்பட்டது.

வழக்கு நிரூபிக்கப்படவில்லையெனத் தெரிவித்த நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பை ஆட்சேபித்து பொலிசார் அப்பீல் செய்கின்றனர். சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வரும்வரை இதரவழக்குகளின் விசாரணையையும் நீதிபதி ஒத்திவைத்தார்.

## சீனவிலிருந்து ரயில் வண்டிகள்

கொழும்பு, திங்கள்

தூர இடங்களுக்கு செல்லக் கூடிய கோச் வண்டிகளும் 40 ரயில் வண்டிகளும் அடுத்த வருடம் சீனவிலிருந்து இலங்கை வரும் எனத் தெரிகிறது.

சீன, இலங்கைக்கு தர இருக்கும் 2 கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான ரயில்வே உபகரணங்களுள் இவை இடம் பெறுகின்றது.

---

## ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை

கொழும்பு, திங்கள்

டாக்டர் பட்டம் பெற்று வெளியேறுபவர்கள் அரசாங்கத்துடன் 10,000 ரூபாய் உறுதிப்பத்திரத்தில் கைச்சாத்திடவேண்டுமென அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள விதிபற்றி பிரதமருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருசாராருக்கும் ஏற்றதொரு முடிவை ஏற்படுத்தும் பொறுப்பை அரசாங்க வைத்தியர் சங்கம் அதன் தலைவர் டாக்டர் டபிள்யு. டி. எஸ். பெர்ணண்டோவிடம் ஒப்படைத்துள்ளது.

நேற்று இது சம்பந்தமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 450 டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

இந்த திட்டம் நீதியற்றதும் சுதந்திரத்தைப் பாதிப்பதாக இருப்பதாகவும் தொழிற்சங்க முறைகளுக்கு முரணாக இருப்பதாகவும் நல்லதொரு உடன்பாடு ஏற்படும்வரை வைத்திய பட்டதாரிகள் சுகாதாரமந்திரியின் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக்கூடாது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

## இன்று

யாழ்ப்பாணம் சென்ட் பட்ரிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா இன்றுமாலை 6 மணிக்கு கலூரி மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம் அதிமேற்றிராணியார் அதி. வண. டாக்டர் ஜே. எமிலியானுஸ் பிள்ளை தலைமைவகிப்பார்.

பண்டாரநாயக்கா கொலை வழக்கு

# "நிருபர்களை சாட்சியமளிக்க அழைக்க வேண்டும்"

## எதிரியின் வழக்கறிஞர் விண்ணப்பம்

கொழும்பு. திங்கள்

பண்டாரநாயகா கொலை வழக்கு அப்பீல் பிரதம நீதிபதி திரு. பஸநாயகா தலைமையில் 5 நீதிபதிகளின் முன் ஆரம்பமாகியது. வழக்கின்போது திரு. ஜி. ஈ. சிட்டியின் துவக்க உரையை எழுதிய நான்கு பத்திரிகை நிருபர்களைச் சாட்சியம் கூற அழைக்க வேண்டுமென புத்தரக்கித்த தேரோவின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஈ. ஜி. விக்ரமநாயகா அப்போது விண்ணப்பித்துக்கொண்டார். அரசாங்கதரப்பு வழக்கறிஞர் திரு. சிட்டி தமக்கு இதில் ஆட்சேபமில்லை எனத் தெரிவிக்கவே இது சம்பந்தமாகத் தீர்ப்புக்கூறுவதை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

முடிக்குரிய வழக்கறிஞர் தமது துவக்க உரையில் சம்பந்தப்படாத சில குறிப்பிட்ட விஷயங்களை பிரஸ்தாபித்ததே தமது பிரதான குறைபாடு என்றும் திரு விக்ரமநாயகா கூறினர். "புத்தரகித்தவுக்கும், வழக்கறிஞர் திரு. கே. வி. நடராஜாவுக்குமிடையே நடைபெற்ற ஒரு டெலிபோன் சம்பாஷணையைப்பற்றியும், இரண்டாவது எதிரி, வழக்கறிஞரின் வீட்டில் பிரசன்னமாயிருந்தார் என்பதும் இதில் குறிப்பிடப்பட்டிருந்ததாயும், சுந்தரம் என்ற ஜோஸ்யரைப்பற்றி இந்த டெலிபோன் சம்பாஷணை இருந்ததாக முடிக்குரிய வழக்கறிஞர் குறிப்பிட்டார்" என்றும் திரு. விக்ரமநாயகா கூறினர்.

கோட்டில் ஜனக் கூட்டம் நிரம்பி வழிந்தது.

# முனிசிபல் அங்கத்தவர்களுக்கு எதிராக லஞ்சப் புகார்

## அடுத்த மாதம் சம்மன்ஸ் அனுப்பப்படும்

கொழும்பு, திங்கள்

கொழும்பு முனிஸிபல் சபையின் லஞ்ச விசாரணைக் கமிஷன் அடுத்த மாதம் முன்னள், தற்போதைய முனிஸிபல் அங்கத்தினர்கள் 14 பேருக்கு சம்மன்ஸ் அனுபபவிருக்கிறது. இவர்களுக்கெதிராக கிடைத்த லஞ்சப் புகார்களை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. பூர்வாங்க விசாரணைக்குப்பின், சம்மன்ஸ் அனுப்பப்படுவதைத் தொடர்ந்து அவர்களின் பெயர்கள் பொது மக்களுக்கு அறிவிக்கப்படும்.

# பகுதிபகுதியாக தண்டனையை

## அனுபவிக்க கைதிகளுக்கு சலுகை

### நிரந்தரக்காரியதரியின் யோசனை ஏற்கப்பட்டது

கொழும்பு, திங்கள்

சிறைக் கைதிகள் அவர்களது தண்டனையை பகுதி பகுதியாக அனுபவிக்க வேண்டுமென்ற நிரந்தரக்காரியதரிசி திரு. ஷெல்டன் பெர்ணண்டோவின் ஒரு யோசனையை சிறைவிஜயக் கமிட்டி அங்கீகரித்திருக்கிறது.

பரீட்சார்த்த அடிப்படையில் இது சம்பந்தமான ஒரு திட்டத்தை புகுத்தும்படி உள்நாட்டு மந்திரியைக் கேட்டுக்கொள்வதென கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

நன்னடத்தையுடனிருக்கும் சிறைக் கைதிகளைப் பார்க்க அவர்களது நண்பர் அல்லது உறவினர் ஒருவர் மாதம் இரு தடவைகள் விஜயம் செய்ய அனுமதிக்குமாறு மந்திரிக்கு சிபார்சு செய்வதெனவும் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. தற்போது இவ்விதக் கைதிகளை அவர்களது உறவினர் அல்லது நண்பர் மாதம் ஒரு முறைமட்டுமே சந்திக்க முடியும்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கும் இரண்டு லொறிகள் (Dodge Lorry and Dodge Tipper) கீழ்க் காணும் விலாசத்தில் விற்பனைக்கு உண்டு.

451, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம்.

திறம் கறவை கேப்பை பசுக்கள் விற்பனைக்கு உண்டு.

த. மயில்வாகனம், 171|3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


# "சூடுவிழுந்ததும் 'அம்மா' என்று கதறியபடி விழுந்தார்"

## ஏழாலை கொலைவழக்கில்சாட்சியம்

மாவிட்டபுரம், திங்கள்

ஏழாலை தெற்கைச் சேர்ந்த செல்லையா சிவபாதசுந்தரம் என்பவரை சுட்டுக்கொலை செய்ததாக மல்லாகத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களான தம்பிப்பிள்ளை கனகரத்தினம், தம்பிப்பிள்ளை நடராசா ஆகிய இருவர் மேலும் சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் சனிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஏழாலையைச் சேர்ந்த கந்தையா நல்லதம்பி என்பவரின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

கடந்த தவணையின்போது சாட்சியம் அளிக்கவந்த நல்லதம்பி சாட்சியமளித்துக்கொண்டிருந்த போது அவருடைய வாயினாலும் மூக்கினாலும் இரத்தம் வந்ததன் காரணமாக அவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கந்தையா நல்லதம்பி தமது சாட்சியத்திற் கூறியதாவது:-

"எனக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இரு எதிரிகளையும் கடந்த நான்கு வருடங்களாகத் தெரியும். அவர்களிருவரும் சகோதரர்கள். இவ்வருடம் ஆகஸ்ட்டு மாதம் 12-ம் திகதி மாலை 3 மணியளவில் நான் சுன்னாகத்திலிருந்து பஸ்ஸில் வந்தேன். பஸ் பெட்ரோல் எடுப்பதற்கு பஸ் டிப்போவிற்குச் சென்றதால் நான் டிப்போவுக்கு முன்னால் பஸ்ஸிலிருந்து இறங்கி ஏழாலையை நோக்கி யாழ்ப்பாணம்—காங்கேசன்துறை பிரதான வீதி வழியாக நடந்துவந்தேன். மல்லாகத்திலுள்ள பெட்ரோல் நிலையத்தை நான் கடந்து வரும்போது ஓர் கார் மல்லாகம் கோர்ட் வீதிவழியாக வந்து, மல்லாகச் சந்தியில் திரும்பி, முதலாவது எதிரியான தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தின் கடைக்கு முன்னால் நின்றதைக் கண்டேன். அந்தக் காரை இரண்டாவது எதிரியான தம்பிப்பிள்ளை நடராசா செலுத்தி வந்தார்.

### "துவக்கை கெதியாய் எடடா என்றார்"

கார் வந்து நிறுத்தப்பட்டதும் 'துவக்கை கெதியாய் எடடா' என்று முதலாமெதிரி இரண்டாம் எதிரியைப் பார்த்துக் கூறினார். இச்சமயம் 1-ம் எதிரி காருக்கருகில் நின்றார். 1-ம் எதிரி துவக்கைக் கேட்டதும் 2-ம் எதிரி காருக்குள் இருந்து துவக்கை எடுத்துத் தமையனிடம் கொடுத்தார். 1-ம் எதிரி துவக்கை வாங்கியதும் அவர் தான் நின்ற இடத்திலிருந்து ஒருமுழம் தள்ளிச் சென்று காலஞ்சென்றவரைப்பார்த்து ஒரு சூடு சுட்டார். காலஞ்சென்றவர் செல்லையாவின் மகன் சிவபாதசுந்தரம் என்று அப்பொழுது எனக்குத் தெரியாது. காலஞ்சென்றவரை 1-ம் எதிரி சுட்டதும் காலஞ்சென்றவர் தமது வயிற்றைப் பிடித்துக்கொண்டு 'அம்மா' எனக்கதறிக்கொண்டு நிலத்தில் விழுந்தார். இச்சம்பவம் நடைபெறும்போது சுமார் 20, 30, பேர் மல்லாகம் சந்தியில் நின்றனர். ஆனால் அவர்களில் ஒருவரின் பெயரையும் எனக்குத் தெரியாது.

இத் துவக்குச்சூடு சம்பவத்தைப் பார்த்ததும நான் பயந்து வீட்டுக்கு ஓடினேன். அவ்வேளையில் மிகவும் தண்ணீர் தாகமாக இருந்ததால் வீட்டுக்குச் சென்று தேநீர் குடித்தேன். அப்பொழுது இச்சம்பவத்தால் இருவர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை கேள்விப்பட்டேன். நான் வீட்டுக்குச் சென்று அரைமணி நேரம் அல்லது ஒருமணி நேரத்தின் பின்னர் மீண்டும் மல்லாகம் சந்தியை நோக்கி இச்சம்பவம்பற்றிஅறிவதற்காகச் சென்றேன்.

### எதிரி தரப்பு வழக்கறிஞர்

ஒருவர் சுடப்படுவதைப் பார்த்து பயந்து வீட்டுக்கு ஓடிப்போன நீர் எவ்வாறு இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தைகேள்விப்பட்டு அச்சம்பவத்தை பார்க்கச் சென்றீர்? நீர் வீட்டுக்குச் சென்று தேநீர் குடிக்கவில்லை. கள்ளுத்தான் குடித்திருக்கிறீர்?

சாட்சி:- இல்லை நான் தேநீர் தான் குடித்தேன்.

நீதிபதி:- நீர் தேநீர் குடிக்கவில்லை சாராயம் தான் குடித்திருக்கின்றீர்?

சாட்சி: இல்லை ஐயா நான் ஓர் வருத்தக்காரன். கடந்த ஒன்றரை வருடமாக நான் சாராயம் குடிப்பதில்லை.

நல்லதம்பி மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

நான் மல்லாகம் சந்திக்கு மீண்டும் திரும்பி வந்தபோது சுமார் 300 க்குமதிகமானோர் கூட்டமாக நின்றனர். காலஞ்சென்றவரைச் சுற்றி பொலிசார் நின்று அவரது உடலைப் பாதுகாத்தனர். காலஞ்சென்றவரின் தகப்பனார் என்னிடம் வந்து நடந்த விஷயத்தைப் பற்றி ஏதாவது தெரியுமோ என்று கேட்டார். நான் கண்ணாற் பார்த்த சம்பவத்தை அவருக்குக் கூறினேன். இச்சம்பவத்தைப்பற்றி சாட்சி சொல்லுவதற்கு வேறு ஒருவரும் முன்வருகின்றார்களில்லையென்றும் என்னைச் சாட்சி சொல்லும்படியும் காலஞ்சென்றவரின் தகப்பனாரான செல்லையா என்னிடம் கேட்டார். அதன்படியே நான் சுன்னாகம் பொலிசாரிடம் இச்சம்பவம் பற்றிக் கண்ணாற் கண்டபடி கூறினேன்.

### மகன்தானென்பது தெரியாது

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஜே. செரும்பிம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது தனக்குச் செல்லையாவை நன்றாகத் தெரியுமெனவும் ஆனால் கொலைசெய்யப்பட்ட சிவபாதசுந்தரம் செல்லையாவின் மகனென்பது தனக்குத் தெரியாது என்றும், இக்கொலைச் சம்பவம் நடைபெற்றபின்னரே சிவபாதசுந்தரம் செல்லையாவின் மகனெனத் தெரிய வந்ததாயும் சுன்னாகத்திலிருந்து பஸ் மார்க்கமாகத் தான் வந்தபோது தான் வந்த பஸ்ஸைச் செலுத்தி வந்த சாரதியையோ கண்டக்டரையோ தன்னால் யாரெனக் கூறமுடியாதென

(8ம் பக்கம் பார்க்க)

# என். எம். தலைமையில் தொழிலாளர் கோஷ்டி

## பிரதமரைச் சந்திக்கும்

நாவலப்பிட்டி, திங்கள்

தோட்டத் தொழிலாளர்களின் குறைகள் சம்பந்தமாக டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் லங்காதோட்டத் தொழிலாளர் யூனியன் தூதுகோஷ்டியொன்று பிரதம மந்திரியை விரைவில் சந்தித்துப் பேசவிருக்கிறது.

லங்காதோட்டத் தொழிலாளர் யூனியன் மத்திய கமிட்டியின் நிர்வாகசபைக் கூட்டம் சமீபத்தில் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் நடைபெற்ற போதே பிரதம மந்திரியைச் சந்திப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோட்டங்கள் தோறும் வேலையில்லாமல் கஷ்டமுறும் வாலிபர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும்.

தோட்டப் பாடசாலைகளில் 100 தமிழ்ப் பிள்ளைகளும், 10 சிங்கள பிள்ளைகளுமிருந்தால் அப்பாடசாலையை சிங்களப் பாடசாலையாகவே, அரசாங்கம் மதிக்கின்றது. இதே போல் 100 தமிழ்பிள்ளைகளும், 10 முஸ்லீம் பிள்ளைகளும் பாடசாலைகளிலிருந்தால் முஸ்லிம் பாடசாலையாகவே கணக்கு எடுக்கப்படுகிறது இது வகுப்பு வாதத்துடன் பாரபட்சம் காட்டப்படும் செயலாகும்.

நூற்றுக் ஐம்பது வீதம் கிராமங்களிலுள்ளவர்களுக்கு தோட்டங்களில் வேலைகொடுக்கவேண்டும் என்பது வகுப்புவாதத்தை உண்டாக்கும் செயலாகும்.

குடும்பத் தலைவனுக்கு நோட்டீஸ் கொடுத்தால் மனைவி—மக்களுக்கும் வேலைநீக்கம் செய்யும் வழக்கத்தை ரத்து செய்யவேண்டும். தொழில் அதிகாரியுடன், அல்லது தொழில் கோர்ட்டில் நடக்கும் வழக்கின் முடிவுக்குப் பின்னர்தான் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் ஓர் கூட்டு ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும்.

சுப்ரீம் கோர்ட், மாஜிஸ்திரேட்கோர்ட், கிராமக் கோர்ட் முதலியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை முடிவதற்கு முன்னரே வேலைநீக்கம் செய்யப்படுவதை ரத்துசெய்யவேண்டும்.

ஒரு தொழிலாளிக்கு வேலை நீக்க நோட்டீஸ் கொடுக்கும் போது காரணம்காட்டியே கொடுக்கவேண்டும்.

சிறு விஷயங்களுக்காக கிராமகோர்ட்டில் தெண்டம் விதித்தால்கூட தோட்டங்களிலும் வேலைநீக்கம் செய்யப்படுகிறது. இருதண்டனை கொடுப்பது பரிதாபகரமானது.

தொழில் கோர்ட்டில் வழக்கு நடந்துகொண்டு இருக்கும் போதே அத்துமீறி லயன்களிலிருப்பதாக தடைவிதிப்பதை ரத்துசெய்யவேண்டும்

வேலை நிறுத்த காலங்களில், வேலைநிறுத்தம் நடைபெறும் போதே தோட்டநிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும்.

வழக்கு நடந்து அதன் முடிவு காணும் வரை ரேஷன் அரிசியும், மருந்து போன்ற உதவிகளையும் நிறுத்தக்கூடாது.

துறைமுகத் தொழிலாளர்கள், அரசாங்கத் தொழிலாளர்களுக்கு சம்பளத்திலனத்துன் றுதொழிற்சங்கத்திற்குபிடித்துக்கொடுக்கும் சந்தாவை போன்று, தோட்டங்களிலும் 'செக்' ரோலிலேயே தொழிற்சங்கத்திற்கும் சந்தாவை பிடித்துக் கொடுக்கவேண்டும்.

## நாக தூதுகோஷ்டி நேருவைச் சந்தித்தது

புதுடில்லி, அக். 30

தற்போது புதுடில்லி வந்துள்ள நாககோஷ்டிப்பிரதிநிதிகள் ஆறுபேர் நேற்றுப் பிரதம மந்திரி நேருவைச் சந்தித்துப் பேசினர். இச் சந்திப்பின் போது அஸ்ஸாம் கவர்னரும் வெளிவிவகார அமைச்சின் காரியதரிசியும் சமுகமாயிருந்தனர்.

நாகாலந்தில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தத் தாம் தொடர்ந்து உழைப்பதாக தூதுகோஷ்டியினர் பிரதமரிடம் சமர்ப்பித்த ஒரு மகஜரில் தெரிவித்திருந்தனர்.

இடைக்கால சபையை இடைக்கால சட்டசபையாக்கும்படியும் நிர்வாகசபையை மந்திரிசபையாக்கும் படியும் அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரில் கூறப்பட்டுள்ளவை பற்றி தாம் பரிசீலனை செய்வதாக பிரதமர் உறுதியளித்தார்.

## திருமண அழைப்பு

**மணமகன்:** திரு. சு. பொன்னுத்துரை கருகம்பனை
[தெல். கி. ச. முன்னை நாள் அங்கத்தவர்]

**மணமகள்:** செல்வி வ. நகுலேஸ்வரி மயிலிட்டி

**காலம்:** 2—11—61 வியாழக்கிழமை முற்பகல் 9 — 10-30 மணி.

**வரவேற்பு:** மணமகள் இல்லத்தில் 3-11-61 வெள்ளிக்கிழமை அன்றும் 4-11-61 சனிக்கிழமை மணமகன் இல்லத்திலும் நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| சு. கனகசபை. | சி. கதிரேசு |
| கிராமவிதானையும் | கிராமவிதானையும் |
| பாரியாரும் | பாரியாரும் |
| கருகம்பனை. | மயிலிட்டி. |


## மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் — ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# குண்டுப் பரீட்சையல்ல பூகம்பம்தான்!

வாஷிங்டன், அக். 30

"நேற்று பதிவான அதிர்ச்சி அலைகள் சோவியத் யூனியனில் குண்டு பரீட்சித்ததால் ஏற்பட்டதல்ல. இரண்டு பூகம்பங்கள் ஏற்பட்டதால் தான் அந்த அதிர்ச்சி ஏற்பட்டது. சோவியத் யூனியனில் வடமங்கோலியா பகுதியிலும் கனடாகரையோரத்திலும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதுதான் நேற்று பாரிசிலும், பிரிட்டன், சுவீடன் ஆகிய இடங்களிலும் அதிர்ச்சி அலைகள் பதிவானதற்குக்காரணம்" என்று அமெரிக்க அணு சக்திக் கமிஷன் அறிவித்தது

சென்றதிங்கட்கிழமை சோவியத் யூனியன் பரீட்சித்தமூன்று கோடி தொன் வெடி மருந்து சக்திவாய்ந்த குண்டு போன்று இரட்டிப்பு மடங்கு சக்தி வாய்ந்த குண்டு நேற்றுக்காலை சோவியத் யூனியனில் பரீட்சிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அதிர்ச்சி அலைகள் பிரான்சில் பதிவாகினவென்றும் பிரஞ்சு அணுசக்தி கமிஷன் அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் சுவீடனில் உப்சலாவிலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சி நிலையமும் சோவியத் யூனியனில் குண்டுப் பரீட்சை நடைபெற்றதாக தெரிவித்தன.

சோவியத் யூனியனில் குண்டுப் பரீட்சை நடைபெற்றஅதே சமயம் பூகம்பமும் ஏற்பட்டிருக்கலாமென்றும் பிரஞ்சு விஞ்ஞானிகள் பின்னர் தெரிவித்தனர்.

குண்டு பரீட்சை நடைபெறவில்லை பூகம்பங்களினுல்தான் அதிர்ச்சி அலைகள் பதிவாகியிருக்கின்றனவென்று அமெரிக்க அணு சக்திக் கமிஷன் இன்று அறிவித்தது.

## வவனியா எம். பி. யின் கவலை

முள்ளியவளை, திங்கள்

"பெரும் பெரும் பிரச்சினைகளிலெல்லாம் தமிழர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றும் வேளையில், இடையிலே உள்ள சில சுயநலத் தரகர்கள் தமிழருடையஒற்றுமையைக்கலைக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுவதைக் காண, வெட்சமும் துக்கமும் அடையவேண்டியுள்ளது."

பனிச்சங்குளம் கிராம முன்னேற்றச்சங்கத்தினுல் கட்டப்பட்ட புதிய பாடசாலையைத் திறந்துவைத்துப் பேசும் போது, வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கி. மு. ச. தலைவர் திரு. இராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் வவனியா எம்.பி. மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"புதுப் பாடசாலைகள், ஆசிரியர் நியமனம் ஆகிய விஷயங்களில் புதுப் புதுச் சிக்கல்கள் என்னை எதிர்நோக்கியுள்ளன. பாடசாலை வசதிகுறைந்த எமது வவனியாத் தொகுதிக்குப்பலப்பல புதுப் பாடசாலைகள் தேவை. ஆனல் எஸ். எஸ். ஸி. தேறிய நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் இத் தொகுதியில் வேலையற்றிருக்கிருர்கள். எனவே புதுப்புது ஆசிரியர்கள் வெளியிடங்களிலிருந்து வரவேண்டிய தேவையில்லாத நிலை இருக்கின்றது.

"அந்தந்தப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு, அவ்வப் பகுதியிலிருந்து எஸ். எஸ். ஸி, சித்தியெய்தியோரையே ஆசிரியராக நியமிக்கவேண்டுமென்று, கல்விப்பகுதியாரின் விதி ஒன்றும் இருக்கின்றது.

# பிரதமர் என்னுடன் போட்டியிடட்டும்!

## ராஜரத்தின சவால்

பதுளை, திங்கள்

"சென்ற பொதுத் தேர்தலில் ஜாதிக விமுக்தி பெரமுன லங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தது. சுதந்திரக் கட்சி நாட்டைப் பாதுகாத்து சிங்களமொழிக்குரிய ஸ்தானத்தையும் பெற்றுவிடும் என்னும் நம்பிக்கையுடனேயே ஜாதிக விமுக்தி பெரமுன அதை ஆதரித்தது. அவர்கள் வணங்கிச் சென்ற கோவில் அவர்களது தலையிலேயே இடிந்துவிழுந்தது போல இன்று நிலைமை ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு முன்னை நாள் வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்ன சிறையிலிருந்து விடுதலையாகிய பின்னர் வெலிமடையில் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. ராஜரத்னவுக்கு சுமார் 5,000த்துக்கு மேற்பட்ட மக்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. காசு நோட்டுகளால் ஆக்கப்பட்ட மாலையொன்றை ஏற்றுக்கொள்வதற்கு ராஜரத்ன மறுத்துவிட்டார். திறந்த வெளியில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மழை கொட்டியது. குடை உபயோகித்துக்கொள்ள ராஜரத்ன மறுத்துவிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

### அடக்குமுறையைக் கையாள்கிறது

"ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு இன்றைய அரசாங்கம் நாட்டில் அடக்குமுறையைக் கையாண்டுவருகிறது. வெலிமடைத் தொகுதிக்கு நான் தேர்தல் அபேட்சகராக நிற்கப்போவதை சட்டரீதியாக தடைசெய்யும் மார்க்கம் எதுவுமில்லை என்று அரசாங்கம் கண்டுள்ளது. அதனுலேயே வெலிமடை இடைத் தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்துள்ளது.

வெலிமடைத் தொகுதி இடைத் தேர்தலில் பிரதமர் சிறிமா போட்டியிடட்டும் என்று திரு. ராஜரத்தின சவால் விடுத்தார்.

பிரதமர் போட்டியிட்டால் தாம் தமது நியமனப் பத்திரத்தைமட்டும் தாக்கல்செய்துவிட்டு வாக்குச்சேகரிப்பதற்குப் பிரசாரம் செய்யாது ஒதுங்கி விடுவதாகவும் திரு. ராஜரத்தின கூறினர்.

தமது உண்ணாவிரதத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் தாம் இறந்திருந்தால் அதைத் தொடர்ந்து நடத்த மற்றும் பலர் இருக்கின்றன ரென்ருர்.

திருமதி குசுமா ராஜரத்தின பேசுகையில் தமது கணவருடன் தம்மையும் தடுப்புக்காவலில் வைத்ததன்மூலம் பிரதமர் இதயமற்ற கொடூரமான முறையில் நடந்துகொண்டாரென்ருர்.

—

பண்டாரவளை, திங்கள்

பண்டாரவளை ஹோட்டலை அதன் சொந்தக்காரர் விற்பனை செய்யவிருப்பதால் அந்தக் கட்டிடத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கடை நடத்துவதற்கு உபயோகப்படுத்தலாம் எனத் தபால் தந்தி ஊழியர்சங்கம் போக்குவரத்து மராமத்து மந்திரிக்கு தெரிவித்துள்ளது.

வாடகைக் கட்டடங்களில் இருக்கும் அராங்க ஆபீஸ்களையும் இந்தக் கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளது.

# 'நண்பர்களின் நல்லாசியினுல் குணமடைந்தேன்'

## கவர்னர்கள் மத்தியில் ராஜன்பாபு நன்றி

புதுடில்லி, அக். 30

புதுடில்லியில் நடைபெற்ற ராஜ்ய கவர்னர்களின் மகாநாடு முடிவடைந்தது. கவர்னர்களின் பதவிப் பொறுப்புப் பற்றியும் மகாநாடு ஆராய்ந்தது.

இந்த மகாநாட்டில் பிரதமர் நேரு பேசுகையில் கோவா, அணு ஆயுத பரிசோதனைகள், தென் வியட்நாம், கொரியா, சீன, பாகிஸ்தான் ஆகியவை பற்றிய பிரச்சினைகளைக் குறிப்பிட்டார்.

மகாநாட்டு அறைக்கு ராஷ்டிரபதி ராஜன்பாபு வந்து கவர்னர்களைச் சந்தித்தார். ராஷ்டிரபதியை உப ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் வரவேற்ருர்.

தாம் ராஜ்யங்களுக்குச் சென்ற பொழுது கவர்னர்கள் தமக்களித்த ஒத்துழைப்புக்கும் தம்மீது காட்டிய பரிவுக்கும் ராஷ்டிரபதி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

"நாட்டிலுள்ள நண்பர்களின் நல்லாசிதான் நான் நோயிலிருந்து குணமடையக் காரணம். எனது நன்றியை உங்கள்மூலம் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ராஜன்பாபு கூறினர்.

"இந்தச் சந்தர்ப்பத்தை உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளவும் பயன்படுத்திக் கொள்கிறேன்" என்று ராஜன்பாபு கூறினர்.

# தென்னுட்டில் மத்திய பல்கலைக் கழகங்கள்

## நிறுவ வேண்டுமென டில்லி மகாநாடு சிபார்சு

புதுடில்லி, அக். 30

தென்னுட்டில் ஒன்றிரண்டு மத்திய பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்று புதுடில்லியில் நடைபெற்று முடிவடைந்த பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் மகாநாடு சிபார்சு செய்துள்ளது.

வட நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் தென்னுட்டு மொழி, தென்னுட்டு இலக்கியம், பண்பாடு பற்றி போதிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் போதிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் மகாநாடு சிபார்சு செய்துள்ளது.

விசாலமான தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு பல்கலைக் கழகங்களில் பல்வேறு பகுதி மாணவர்களும் கலந்து பழக வசதிகள் செய்யப்பட வேண்டுமென்றும் மகாநாடு யோசனை கூறியது.

ஒருமை உணர்ச்சி ஏற்படுத்துவதற்கு வகுப்பு அடிப்படை பெயர்களைக் கொண்ட பல்கலைக் கழகங்களின் பெயர்கள் மாற்றப்பட வேண்டுமென்றும் மாணவர் யூனியன்கள் கலாசார கழகங்களாக்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

பிராந்திய வரலாறுகள் வரைவதற்கு மத்திய ஸ்தாபனம் ஒன்று நிறுவப்படவேண்டுமென்றும் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்ற மன உணர்வு இல்லையானல் நோக்கமே சிதைந்து விடுமென்றும் மகாநாடு யோசனை தெரிவித்தது.

—

## ஆசிய வாலிபர்களின் வாழ்க்கையை விளக்கும் "போட்டோ" கண்காட்சி

கோலோன், அக். 29

ஆசிய நாடுகளில் வசிக்கும் வாலிபர்கள் எத்தகைய வாழ்க்கையை நடத்துகிருர்கள் என்பதை விளக்கும் புகைப் படங்களின் கண்காட்சி ஜேர்மன் நகரில் நடைபெற்றது.

இதில் 65 புகைப் படங்கள் இடம் பெற்றிருந்தன. வாலிபர்கள் படிப்பது, விளையாட்டுகளில் பொழுது போக்குவது, மீன் பிடிப்பது, கூட்டங்களிலும் விவாத அரங்குகளிலும் கலந்து கொள்வது ஆகிய படங்கள் உள்ளன.

இப் படங்களைப் பெற யூனெஸ்கோ கமிஷன் ஒரு போட்டியே நடத்தியது. இந்தியா, இலங்கை, ஜப்பான், கொரியா, டைவான், மலேயா, வியட்நாம் ஆகிய நாட்டு வாலிபர்கள் இப் புகைப் படங்களை எடுத்து அனுப்பியிருக்கிருர்கள்.

# முஸ்லிம் லீக்கின் பெயரை மாற்றக் கோரிக்கை

சென்னை, அக். 30

முஸ்லிம் லீக்கின் பெயரை 'அகில பாரத முஸ்லிம் லீக்' என மாற்ற வேண்டுமென்றும் முஸ்லிம்களின் மதம், பண்பாடு ஆகியவைகளிலேயே அது கவனம் செலுத்த வேண்டுமென்றும் நேற்று சென்னையில் கூடிய முஸ்லிம் லீக்கின் 200 பிரதிநிதிகள் கொண்ட ஒரு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேரடி பார்லிமெண்ட் நடவடிக்கைகளில் முஸ்லிம் லீக் கலந்துகொள்ளக் கூடாதென்றும் அந்தக் கூட்டம் தீர்மானித்தது.

தேசிய ஒருமைப்பாடு சம்பந்தமான அரசாங்கத்தின் முயற்சியை கூட்டம் ஆதரித்ததுடன் இந்த முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பளிப்பதென்றும் கூட்டம் தீர்மானித்தது.

முஸ்லிம் லீக் தலைவர் இஸ்மாயிலுக்கும் அங்கத்தினர் சிலருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமைதான் இந்தக் கூட்டத்துக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

—

## கிராமவாசிகளுக்கு கடன் உதவி

கொழும்பு, திங்கள்

கிராமப்பகுதி மக்கள் தமது வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு மக்கள் வங்கி கடனுதவி வழங்குவதற்கு உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி சம்மதம் தெரிவித்துள்ளார்.

சிறியளவில் விவசாயம் செய்வதற்கும், கால்நடைப்பண்ணைகள் நடத்துவதற்கும், கைத்தொழில்கள் வர்த்தகம் முதலியவை நடத்தவும் மக்கள் வங்கி கடன் உதவுவதற்கு மந்திரி சம்மதித்துள்ளார்.

## அபிவிருத்தி வரி

கொழும்பு, திங்கள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைக் காரியாலயங்களில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களிடம் தேசிய அபிவிருத்திவரி வசூலிப்பது இலங்கை அரசாங்கத்துக்கு இப்பொழுது ஒரு பிரச்சினையாகியுள்ளது.

இவர்களிடமிருந்துஎவ்விதவரிஅறவிடலாம் என்பதுபற்றி வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு நிர்வாகப்பகுதி ஆலோசனை செய்துவருகிறது.

இலங்கையில் அவர்கள் சேவை செய்தால் அவர்கள் அப்பொழுது எவ்வளவு சம்பளம் பெறுவார்களோ அந்த சம்பளத்திலிருந்து 4 சதவீத வரி அறவிடுவதா இல்லையேல் வெளிநாடுகளில் அவர்கள் இப்போது பெறும் சம்பளத்திலிருந்து இந்தவரியை அறவிடுவதா என்பதுபற்றி இப்பொழுது ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

# 7500 மைல் தூரம் சென்ற ரொக்கட்

## பசிபிக்கில் ரஷ்யப் பரீட்சை முடிவு

மாஸ்கோ, அக். 30

பசிபிக்கில் சோவியத் யூனியன் நடத்திவந்த பல கட்ட ரொக்கட் பரீட்சைத் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. பசிபிக்கில் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு விட்டது.

நேற்று ஏழு கட்டங்களைக் கொண்ட பெரிய ரொக்கட் ஒன்றை ரஷ்யா கடைசியாக பரீட்சை செய்தது. 7500 மைல் தொலைவுக்குச் சென்று குறிப்பிட்ட இடத்தில் அதில் செலுத்தப்பட்டிருந்த பேழை விழுந்தது. இந்த ரொக்கட் பரீட்சை மூலம் பல புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவாம்.

### மணி வாக்கு

"நீரானது ஆவியாக உயர்ந்து பின் நீராகி உலகத்தைக் காக்கின்றது. அதேபோல் நாமும் சுயநலத்தை விட்டு தெய்வத் தன்மை பெற்றுப் பின் மக்களுக்குச் சேவை செய்தல் வேண்டும்."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 15 உ (31-10 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## இலங்கையின் அரசியலமைப்பு

இலங்கையின் இப்போதைய அரசியல் அமைப்பைத் திருத்தி அமைக்க ஒரு பார்லிமெண்ட் கமிட்டி நியமிக்கப்பட இருக்கின்றது. இக்கமிட்டியில் யாரார் நியமிக்கப்படுவரென்ற விவரங்கள் இனித்தான் தெரியவரும். என்றாலும் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களே அதிகமாக நியமிக்கப்படுவர். மற்ற எதிர்க் கட்சியிலிருந்தும சிற்சிலர் அதில் இடம் பெறலாம். இக்கமிட்டிக்கு நியமிக்கப்படுபவர்களனைவரும் கட்சி நோக்கத்துடனும், அடுத்த தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்துடனும்தான் ஒவ்வொரு விஷயத்தையும் வெகுவாக ஆராய்வார்களேயன்றி, பொதுவாக கட்சி அரசியலுக்கு அப்பால், பொது நன்மைக்கான நோக்கத்துடனும் அரசியல் ஞானத்துடனும் கவனிப்பார்களா என்பது சந்தேகமே.

இன்று இலங்கை அரசியல் சங்கடங்களுக்குப் பெரிதும் காரணம், இங்கு நடந்து வரும் சோல்பரி அரசியல் திட்டம்தான். இச் சங்கடங்கள் நீங்கி நாட்டில் சமூக ஒற்றுமை ஏற்படவும், நாடு முன்னேற்றமடையவும் வேண்டுமானால், விரிவான அடிப்படையிலே, கட்சி முதலிய குறுகிய எண்ணங்கள் சிறிதுமின்றி, அரசியல் கட்சிப் பற்றற்ற அரசியல் ஞானிகளும் அனுபவஸ்தர்களுமடங்கிய அரசியல் நிர்ணய சபைதான் தகுந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க முடியும்.

இந்தியாவிலும் கூட, பார்லிமெண்ட் சபைக்கு வெளியே இருந்து கட்சிப்பற்றற்ற அறிஞர்களையும் அனுபவஸ்தர்களையும் அரசியல் நிர்ணய சபைக்கு நியமித்தனர். பல விஷயங்களிலும் இந்தியா காட்டும் வழியைப் பின்பற்ற முயலும் இலங்கை, நாட்டின் எதிர்காலத் தலை விதியைப் பற்றிய இம்முக்கிய விஷயத்தில், பாரதம் காட்டிய வழியில் விரிந்த அடிப்படையிலே, ஓர் அரசியல் நிர்ணய சபையை நியமிப்பது பல விதங்களிலும் உசிதமும் அவசியமுமாகும்.

சில வருஷங்களுக்கு முன் இதே நோக்கத்துக்காக பார்லிமெண்ட் அங்கத்தினர் மட்டும் அடங்கிய ஒரு கமிட்டி இங்கு நியமிக்கப்பட்டது இக்கமிட்டியின் வேலைகள் உருப்படவில்லை. மீண்டும் இப்போது நியமிக்கப்படும் கமிட்டியின் வேலைகளும் அப்படியே முடிந்துவிடக் கூடாது. பல கட்சிகளையும் சேர்ந்த மெம்பர்கள் நியமிக்கப்படின், அவர்கள் கட்சிக் கண்ணுடனேயே குறுகிய திருஷ்டியுடன் யோசனைகள் கூறலாம். நேர் முரணான யோசனைகள் கூறப்பட்டு, முடிவில் மெஜாரிட்டியான அரசாங்கக் கட்சியின் யோசனைகளே நிறைவேறி. மற்ற கட்சிகளின் கருத்துகளுக்கு சற்றும் இடமில்லாமலும் போய்விடவும் கூடும் இத்தவறு ஏற்பட்டுவிடாமல் தடுக்க, கட்சிப்பற்றற்ற அனுபவஸ்தர்களும் அரசியல் அறிஞர்களும் அடங்கிய ஒரு விரிவான அரசியல் நிர்ணய சபை நியமிக்கப்பெற வேண்டும்.

இப்போது நியமிக்கப்பெறும் பார்லிமெண்ட் அரசியல் கமிட்டி, இந்த சிக்கலான அரசியல் பிரச்சினையை எவ்வளவு தூரம் தீர்க்க முடியுமென்பது நிச்சயமில்லை. தங்கள் குறைகளையும் வரையறைகளையும் அக்கமிட்டி மெம்பர்கள் நன்குணர்ந்து, பொறுப்பான இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, விரிவான முறையில் அரசியல் நிர்ணய சபையை அமைக்க வேண்டும். அரசாங்கம் தானாக அவ்விதம் செய்யுமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஆகவே இனி நியமிக்கப் பெறும் அரசியல் கமிட்டி, தேசாபிமானத்துடனே, இதை கவனித்து, விரிந்த முறையில் அரசியல் நிர்ணய சபையை நியமிக்க வேண்டும். அவ்வித சபையே, தக்க அரசியலைத் தயாரிக்கவும், நாட்டில் தேசிய ஒற்றுமை பலப்படவும் உதவியதாகும்.

## புதிய கல்வி அமைப்பில்

# பள்ளிக்கூட பரிபாலனம்

## அதிபர்கள் மகாநாட்டில் உதவிவித்தியாதிபதி சோமசேகரம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நாட்டு மக்களின் கல்வியை விருத்தி செய்யும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரும் அடிக்கடி ஒன்று கூடித் தமது பிரச்சினைகளைப் பற்றி கலந்தாலோசித்துப் பேசிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்வாறு கூடிப் பேசிக் கொள்வதால்தான் தமது கடமைகளை தொடர்புடையனவாக்கிப் பள்ளிக்கூடங்களின் நலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த நோக்கத்துடனேயே இம் மகாநாட்டை நான் இன்று கூட்டியுள்ளேன்".

இவ்வாறு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்பபாண ஆங்கில பாடசாலைகளின் அதிபர்கள் மாநாட்டில் பேசும்போது கூறினார்.

பாடசாலை பரிபாலனம்பற்றியும், அதிபர்கள் கடமை பற்றியும் ஆராய்வதற்கென வித்தியா பகுதியினால் இம் மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாட்டில் திரு. சோமசேகரம் தொடர்ந்து பேசியதாவது:-

கல்வித்துறை வேலைகளை முன்னர் மூன்று சார்பினர் நடாத்தி வந்தனர். முதலாவதாக, கல்வி இலாகாவைக் கூறலாம். கல்வி இலாகா கல்வித்துறைக்கான நிதி விவகாரங்களைக் கவனித்து வந்தது. அடுத்தபடியாக இலாகாவின் சார்பில் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு கல்வி விவகாரங்களைக் கண்காணித்து வந்தவர்கள் மனேஜர்களாவர். கல்வித்துறை வேலைகளைக் கவனித்து வந்த மூன்றாவது சார்பினர் பள்ளிக்கூட அதிபர்களும் ஆசிரியர்களுமாவர். மூன்றாமவர்கள் மனேஜருக்கு ஒருபுறமும், கல்வி இலாகாவுக்கு மறுபுறமும் விசுவாசமுள்ளவர்களாக நடந்து வந்தனர். அதிகாரம், மனேஜர்களிடமிருந்து ஆசிரியர்களுக்கு மாற்றப்பட வேண்டுமெனப் போராட்டம் நடைபெற்றது. மனேஜர்கள் சலுகையிழந்தனர். பள்ளிக்கூடங்களை ஏற்று நடாத்தும் பொறுப்பு இலாகாவைச் சேர்ந்துள்ளது.

ஆசிரியர்களுக்கும் மனேஜர்களுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தின்போது ஆசிரியர்கள் இலாகாவின் உதவியைக் கோரினர். இப்போது இரண்டு சார்பினரே உளர். பள்ளிக்கூடத்தின் நலன்கள் இன்று பெரும்பாலும் தலைமை ஆசிரியரிலும் ஆசிரியர்களிலுமே தங்கியுள்ளது. பள்ளிக்கூட நிருவாகத்தின் பொறுப்பு தலைமை ஆசிரியரையே பெரிதுஞ் சார்ந்துள்ளது.

சில பள்ளிக்கூட அதிபர்கள், பள்ளிக்கூட நிர்வாக வேலைகளில் பாராமுகமாக இருந்து வந்துள்ளமைக்கு நிதி சேமிப்பு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தும் மனேஜர்கள் காரணமாக இருந்திருக்கலாம். இப்போது நிலைமை மாறியுள்ளது. ஆசிரியர்கள் நிலைமை மாற்றங்கள் பற்றி அவதானமாக இருப்பதோடு அவற்றின் அம்சங்களை அறிந்து தமது மாணவர்களின் நலனுக்குத் தம்மால் இயன்றதைச் செய்யவேண்டும்.

தமது பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்குப் பெற்றோர்களதும் பொது மக்களதும் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரிலும் பார்க்க இப்போது ஆசிரியர்கள் அதிகம் உழைக்க வேண்டும். மாற்றங்கள் பற்றிப் பெற்றோரும் பொது மக்களும் அறிவூட்டப்படல் வேண்டும். எனவே பிள்ளைகளின் நன்மைக்குப் பெற்றோரது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

கல்விப் பிரச்சினைகள் அதிகமாகியுள்ளன. பள்ளிக்கூட மாஜி நிருவாகர்களும் பொதுமக்களும் கல்வி முறையில் அடிப்படை மாற்றங்களைக் கோரலாம். அவர்கள் ஆசிரியர்கள்மீதும் தவறுகளைச் சுமத்தலாம். பாடத்திட்டங்களால் பயிற்சி வேலைகளுக்கும் கைப்பணிகளுக்கும் தக்க வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலும் இங்கிலாந்திலும்கூட பழைய கல்வி முறையே இருந்து வந்திருக்கின்றது. மாற்றம் எதற்கும் தேசிய மறுப்பு உண்டு. பெற்றோர்கள் விரும்பும் பள்ளிக்கூடங்கள் பலதரப்பட்டவை. தமது பிள்ளைகளுக்குக் கடினமான பாதை வகுக்கும் பள்ளிக்கூடங்களைப் பெற்றோர் வெறுப்பர். பொதுவாக விரும்பப்பட்ட பாதையிலேயே மனேஜர்கள் சென்று கொண்டிருந்தார்கள். புதிய முறையின்கீழ் கல்வி முறை நன்கு திட்டமிடப்பட்டுள்ளது. முற்போக்குள்ள அடிப்படைக் கல்வி வழங்கப்படும், உயர்தரக் கல்வி ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டு நாட்டுக்குப் பயன்தரக்கூடிய முறையில் கல்வி வழங்கப்படும். பலர் இதை எதிர்க்கக்கூடும். ஆனால் நாட்டின் நலனுக்காக மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன. அறிவுக் கல்விக்கு வசதிக்கட்டணம் இவ்வளவு காலமும் வழங்கப்பட்டது போல வழங்கப்படமாட்டாது.

## நிபுணர்கள் இருந்தும் வைத்தியம் இல்லை

கொழும்பு, திங்கள்

பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தேவையான நல்ல வைத்தியக் கருவிகள் இல்லாமையால் வைத்திய நிபுணர்கள் தமது சேவையை செய்யமுடியாத நிலைமையேற்பட்டுள்ளது. சுகாதார இலாகா சுகாதார அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இது பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலாகா அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வைத்தியர்கள் நிபுணத்துவம் பெறுவதற்காக வழங்கப்படும் உபகாரச் சம்பளம் அவ்வளவு துரிதமாக வழங்கப்படாததால் இருக்கும் வசதிகளை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ரண சிகிச்சை சம்பந்தமாக இன்னும் போதிய வசதிகள் அளிக்கப்படல் வேண்டும். இதற்கு போதிய டாக்டர்களும் போதிய இடவசதியும் தேவையான வைத்தியக்கருவிகளும் அவசியம்.

## 'சமயப்பற்றின்மையே துன்பவாழ்வுக்குக் காரணம்'

மானிப்பாய், திங்கள்

"சமயப்பற்றின்மையும், பிறரைச் சகோதரர்களாகக்கணிக்கும் பண்பு இல்லாமையுமே குற்றங்கள் புரிவதற்கும் துன்பம் நிறைந்த வாழ்வுக்கும் காரணங்களாகும். எனவே மக்களிடையே நல்லெண்ணமும் நட்புறவும் வளரவேண்டும். இவற்றை அடைவதற்கு சனசமூக நிலையமே தக்க சாதனமாகும்.''

இவ்வாறு முதலியார் வி. தியாகராஜா மானிப்பாய் வட்டார சனசமூகநிலையத்தின் 18 வது ஆண்டுப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

சன சமூக நிலையத்துக்கு அரசாங்கம் ஒரு சிறு பண உதவியே செய்து வருகிறது. சன சமூகநிலையம் பொறுப்பேற்றுச் செய்யக் கூடியவற்றை, நிதி இல்லாத காரணத்தால் அது செய்யமுடியாதிருக்கிறது. சன சமூ நிலையத்துக்குத் தேவையான புத்தகங்கள்வாங்குவதை விட அரசாங்கம் உதவும் பணத்தைக்கொண்டு வேறெதுவும் செய்யமுடியாதிருக்கிறது. தேவையான பணத்தை உதவுவதற்கு முடியாதிருந்தால் குறைந்த அளவு பொருள்களையும் உடகரணங்களையேனும் அரசாங்கம் சனசமூக நிலையங்களுக்கு உதவலாம்."

மானிப்பாய் சனசமூகநிலைய செயலாளர் திரு. எஸ். சரசானந்தராஜா ஆண்டறிக்கையை வாசித்தார். அடுத்த வருடத் தலைவராக டாக்டர் எச். பி. செல்லையா தெரிவுசெய்யப்பட்டார்.

## கல்வியால் புதுமாற்றம்

பிங்கிரியா, திங்கள்

'சமூகத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது கல்விதான். ஏழைகளின் பிள்ளைகளை அந்தஸ்தில் உயரச் செய்து சமூகத்தில் இருக்கும் பாகுபாடுகளை நீக்குவது கல்வியே' என இங்குள்ள மகா தெனிகமா பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜெயசேன தெரிவித்தார்.

வலிப்பனை எம். பி. திரு. ஜே. பி. எம். ஹரத் பேசியதாவது:

'இலங்கையிலுள்ள சகலரும் தமது இன மத வேறுபாடுகளை மறந்து சகோதரர்கள் போன்று ஒற்றுமையாக வாழ வேண்டும்' என்றார்.

### ஐயாறன் எழுதுவது

கொழும்பு வெள்ளவத்தையிலே ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் ஆதரவில் இந்து கலாசார ஸ்தாபனமும் மாணவர் விடுதியும் அநேகமாகக்கட்டிமுடிந்து விட்டதைக் கண்டேன். இது வரை நாலரை லட்ச ரூபாய்கள் ஆகியுள்ளதாம். இன்னும் ஒரு சில வாரங்களில் வேலை பூர்த்தியாகிவிடலாம்.

இரண்டுவருடங்களுக்கு முன்பாக இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், இந்த ஸ்தாபனத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டினர். இந்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும்இதற்குஉதவிப்பணமளித்துள்ளதுடன் இரு அரசாங்க உதவியுடனும், பொது மக்கள் ஆதரவுடனும் எழுந்துள்ள இந்த அழகிய கட்டடம் 250 மாணவர்கள் வசதியாக வசிக்கவும் புசிக்கவும் வாசிக்கவும் கூடிய நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.

தலைநகரிலே ஒரு முக்கிய சமூக தேவையை இது பூர்த்தி செய்வதுடன், கொழும்புநகும் சிறப்பாக இந்து சமூகத்துக்கும் இது பெருமையளிப்பதாகும். கொழும்புக்கு இனி வருபவர்கள், பார்க்க வேண்டிய முக்கிய இடங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும். இருநாடுகளுக்கிடையிலும், பல சமய சமூகத்தவருக்கிடையிலும் ஒற்றுமையையும், சமரசத்தையும் வளர்க்க இந்த ஸ்தாபனம் மேலான பணி செய்யுமென்று நம்புகிறேன். இங்கு வசித்து படிக்கக்கூடிய மாணவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் வழிவழியாக, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் இவர்களது பூரண ஆசி பெற்று, சமரச வீரர்களாகத் திகழ்ந்து, இந்து சமயத்துக்குப் புத்துயிர் அளித்து மக்கள் குலத்துக்கு மேலான பணி செய்பவர்களாகப் பொலிவார்களென்றே என் மனம் கூறுகின்றது.

* * *

பேராசிரியர் துரைசாமிசாஸ்திரியார் நடத்திவரும் ஸ்ரீபகவத்கீதை உபந்நியாசத்தை சென்ற சனிக்கிழமையன்று கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சென்று கேட்டேன். ஒன்றரை மணி நேரமும் போனதே தெரியவில்லை. அவர் இனிமையாக சமஸ்கிருதசுலோகங்களைக் கூறும் போது, அர்த்தம் விளங்காவிடினும் தம்மையும் அறியாமல் தன் தலை அசைவதாயும், மெய் மறந்து, தியானம் கூடுவதாயும் ஓர் அன்பர் தன் அனுபவத்தைச் சொன்னார். சென்ற ஜூன் மாதம்முதல் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் இந்த ஆங்கில உபந்நியாசங்கள் நடந்து வருகின்றனவாம். மண்டபம் நிறைய ஆண் பெண்கள் இருந்து, இதை அனுபவித்து வருகின்றனர்.

அன்று இரண்டாம் அத்தியாயத்திலே ''ஸ்திதப் பிரஞ்ஞனின் லட்சணங்களைப்பற்றிய சுலோகங்களை விளக்கினர். சுகதுக்கங்களை சமமாக பாவித்து, பற்றற்று வாழும் ஜீவன் முக்தர்களுடைய அடையாளங்களை விளக்கும் 53 சுலோகங்களும், மகாத்மா காந்தியின் தினசரி பிரார்த்தனையில் அடங்கியதாகும். அவரும் ஒருபெரிய ஜீவன்முத்தரல்லவா?

மிகவும் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களடங்கிய இவ்விஷயத்தை மேலாக விளக்கிய பேராசிரியர், நகைச் சுவையுடன் பேசி, எல்லாரையும் பன்முறையும் சிரிக்கவைத்து விட்டார். அரிய விஷயங்களை மிக இனிமையாகப் புகட்டக்கூடிய இந்த பிரசங்கங்களை யாழ்ப்பாணத்திலுள்ள எனக்குகேட்க முடியாமலிருக்கிறதே என்று ஏமாற்றமாகவும், அங்குஇருந்து ஒழுங்காகக் கேட்பவர்களைக் கண்டு ஒருவித பொறாமையும் கூட ஏற்பட்டது.

(5ம்பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி

# மகாஜன - ஸ்கந்தவரோதய கல்லூரிகள் வெற்றி

## மானிப்பாய் இந்து - மத்திய கல்லூரிகள் தோல்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் பாடசாலைக்கிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நான்கு போட்டிகளில் 8 கல்லூரி கோஷ்டிகள் கலந்து கொண்டன.

சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் கலந்து கொண்டன. யூனியன் கல்லூரிக் கோஷ்டி 6—0 கோல்களால் மானிப்பாய் கோஷ்டியைத் தோற்கடித்தது. இரண்டாவது போட்டியில் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரி 2—1 கோல்களால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை ஜெயித்தது.

திருவாளர்கள் இ. கனகலிங்கமும், இ. சபாலிங்கமும் முறையே முதலாம் இரண்டாம் போட்டிகளுக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 4 — 2 கோல்களால் கொக்குவில் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது இதுவரையில் யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்கே நடைபெற்ற போட்டிகளில் இப்போட்டியைக் பார்ப்பதற்காக பெருந்திரளான இரசிகர் கூட்டம் அங்கு திரண்டிருந்தது. இரு கோஷ்டிகளுக்கிடையேயும் உக்கிரமமாக விளையாட்டு அமைந்திருந்தது. இருகோஷ்டியினரும் பாராட்டுதல்களைப் பெறுமளவுக்கு விளையாடினர். மகாஜனக் கல்லூரி மத்திய முன்னணி வீரரான பத்மநாதன் அன்று தனது கோஷ்டிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுக்க முன்னின்றது மாத்திரமல்ல இரசிகர்களின் அபாரமான பாராட்டுதல்களைப் பெறவும் தவறவில்லை.

திரு. கே. நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3 — 0 கோல்களால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது.

திரு. எஸ். ஸ்ரீ நிவாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

—

## இலங்கையரல்லாதவருக்கு இடம்

கொழும்பு, திங்கள்

அரசாங்கப் பாடசாலைகளிலும் வித்தியாதிபதியின் கீழுள்ள பாடசாலைகளிலும் இலங்கையர் அல்லாத மாணவர்கள் தொடர்ந்து பயின்று வரலாம் என கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா சகல உதவி வித்தியாதிபதிகளுக்கும் அறிவித்துள்ளார்.

இலங்கையர்களுக்கு முதலில் இடம் அளித்த பின்னர் இடம் இருந்தால் இலங்கையரலலாதவர்களுக்கு இடம்வழங்கப்பட வேண்டுமென திரு. ஜினதாசா தெரிவித்துள்ளார்.

—

## அம்மை நோய் பரவவில்லை

கொழும்பு, திங்கள்

இதுவரை 16 பேருக்கு அம்மைநோய் கண்டிருப்பதாகவும் 4 பேர் இந்நோயால் இறந்ததாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அம்மைநோய் மேலும் பரவவில்லையென்றும் குளியாப்பிட்டியாப் பகுதியிலுள்ள முகான்கெலவில் இந்நோய் பரவியுள்ளதாக சந்தேகிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த 50 பேர்களையும் தமது இல்லங்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப் போவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தீர்த்துவைக்கப்பட்ட தோட்டப் பிரச்சினைகள்

நாவலப்பிட்டி, திங்கள்

தோட்டத்தொழிலாளர் பலரின் பிரச்சினைகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமீபத்தில் தீர்த்து வைத்தது. தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் விபரம் வருமாறு:-

### வேலை கிடைக்கும்

13-10-1961-ல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்டப் பிரதிநிதிக்கும், வவ்வாப்பிட்டிய தோட்ட நிர்வாகத்தர்களுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் மறியலுக்குச் சென்று திரும்பியிருக்கும் திருவாளர்கள்: வேலு, மாரிமுத்து ஆகியவர்களுக்கு தொடர்ந்து 1-1-1962 முதல் தோட்டத்தில் வேலை கொடுப்பதாக ஒத்துக்கொள்ளப்பட்டது.

### அதே டிவிஷனில் வேலை

14-10-1961-ல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்ட பிரதிநிதிக்கும், நபப்பனை தோட்ட நிர்வாகத்தர்களுக்குமிடையில் நடைபெற்ற நல்லெண்ணப் பேச்சுவார்த்தையில், தோட்டத்திற்குச் சொந்தமான விறகுகளை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு வேலையிலிருந்து நிறுத்தியிருந்த திரு. அம்மாவாசி என்பவருக்குத் தொடர்ந்து அதே டிவிஷனில் வேலை கொடுப்பதாக நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

### ஏசிய ஆற்றச் சாட்டு!

24-10-1961-ல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கம்பளை மாவட்ட பிரதிநிதிக்கும், மாசிக்கும்பரை தோட்ட நிர்வாகத்தர்களுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் கணக்கப்பிள்ளையை ஏசியதாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த தி. இராமையா என்பவருக்கு மீண்டும் அதே தோட்டத்தில் வேலை கொடுப்பதாக நிர்வாகம் இணங்கியது.

### குடும்பங்களுக்கு வேலை

பொன்னையா குடும்பத்திற்கும், மூக்கன் குடும்பத்திற்கும், தேயிலைச் செடிகளைக் கண்டபடி வெட்டி விறகிற்குப் பயன்படுத்திய குற்றத்திற்காக உடன் பற்றுச் சீட்டு கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக புசல்லாவையைச் சேர்ந்த சோமாவத்தை தோட்ட நிர்வாகத்தர்களுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்டப் பிரதிநிதிக்குமிடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்குப்பின் மீண்டும் அவர்களுக்குத் தோட்டத்தில் பதிந்து வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### காம்பருப் பிரச்சினை

இலெட்சுமி என்ற ஒரு பெண்ணுக்கு தனி ஒரு லயக்காம்பருவில் குடியிருந்ததால், அக்காம்பருவைவிட்டு இன்னொரு சிறிய காம்பருவுக்கு போக வேண்டுமென்று நிர்வாகம் கேட்டும், அதை தட்டிக் கழித்துக் கொண்டு வந்தபடியால் மேற்படி பெண்ணுக்கு வேலை நீக்கம் செய்தது சம்பந்தமாக புசல்லாவையைச் சேர்ந்த பேமவுண் தோட்ட நிர்வாகஸ்தர்க்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்டக் காரியாலயத்திற்குமிடையில் நடைபெற்ற பல கடித போக்குவரத்துக்குப்பின் அப்பெண்ணுக்கு மீண்டும் தோட்டத்தில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

### கல்யாணமானபின்னும் வேலை

21-10-1961ல் அட்டன் உதவி தொழில் அதிபர் தலைமையில் கூட்டப்பட்ட மகா நாட்டில் நம்பொடை தோட்ட நிர்வாகஸ்தற்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்டத்திற்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்; அங்கு வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த திருவாளர்கள் பொன்னம்பலம், சின்னப்பன் ஆகியவர்களில் திரு. சின்னப்பனின் குடும்பத்தார்களுக்கு மட்டும் உடனடியாக தோட்டத்தில் பதிந்து தொடர்ந்து வேலை கொடுப்பதாகவும் பொன்னம்பலத்தின் வேலை நீக்கம் சம்பந்தமாக தொழில் நீதிமன்றத்துக்கு காங்கிரஸ் மூலமாக மனுதாக்கல் செய்திருக்கிறபடியால் அவருக்கு அதன் முடிவை பார்த்து நடவடிக்கை எடுப்பதெனவும் பேசி முடிவு செய்யப்பட்டிருந்ததுடன், கல்யாணம் கட்டி வந்த பெண்களுக்கு உடனடியாக தோட்டத்தில் பதிந்து வேலை கொடுப்பதாகவும் நிர்வாகம் ஒத்துக்கொண்டுள்ளது.

### சப்பளப் பிரச்சினை

கம்பளையைச் சேர்ந்த அம்பலாவ தோட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக தொழிலாளர்களுக்கு சம்பளம்போடாதது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், கம்பளை மாவட்ட உட்தியோகஸ்தர்கள் நாவலப்பிட்டிய தொழில் அதிகாரி அவர்களுக்கு பலமுறை புகார் செய்ததின் பேரில் இது சம்பந்தமாக தொழில் அதிகாரி தோட்டத்திற்குச் சென்று கணக்குகளை பரிசோதித்து நிலைமையைதெரிந்து கொண்டபின் பிறகு நிர்வாகஸ்தரின் பேரில் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்வதாக உறுதி கூறியிருக்கிறார். மேலும் இந்த தோட்டத்தில் கடந்த 1958வது ஆண்டில் ஆட்கள் கூடுதலாக விருப்பதாக காரணம் கூறி 68 தொழிலாளர்களுக்கு வேலை நீக்கம் செய்தது சம்பந்தமாக, காங்கிரஸ் இக்க வேலைநீக்கத்தை தொழிற் கோடுகள் சமர்ப்பித்தது. பிறகு தொழிற் கோர்ட் நீதிபதி வேலை நீக்கம் செய்தது நியாயமில்லை என்றும், இவர்களுக்கு நஷ்டஈடாக 20 நாள் வாழ்க்கைப்படி செலவை கொடுப்பதுடன் காங்கிரசுக்கு நஷ்ட ஈடாக ரூபாய் 315தையும் ஒரு மாதத்திற்குள் கட்ட வேண்டுமென்றும் தீர்ப்பளித்துள்ளது. ஆனல் நஷ்ட ஈடு போதாது எனக் கூறி மீண்டும் காங்கிரஸ் மத்திய கமிட்டி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

—

## பீகார் வெள்ளம்: 436 பேர் பலி

புதுடில்லி, அக். 30

பீகார் வெள்ளத்தில் இதுவரை 436 பேர் இறந்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

# கதிர்காம மடங்கள் அகற்றுவதற்கு எதிர்ப்பு

சைவ மதத்தினரின் புனிதமான புண்ணிய ஸ்தலமாகக் ஸ்ரீகதிர்காமம் விளக்குகின்றது ஆனல் காலப்போக்கில் பல மாறுதலடைந்துள்ளது. சரித்திரம் அதனை எடுத்துகாட்டும். ஸ்ரீ கதிர்காமத்திலுள்ள மடங்களை மாணிக்கக் கங்கையின் மறுகரையில் அப்புறப்படுத்தும் விஷயமாகப் பலர் எழுதியுள்ளதை கண்ணுல்றேன்.

1840 ஆண்டில் இந்நாட்டிற் வியாபாரம் செய்துவந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார் கதிர்காம யாத்திரை செய்யுங்கால் தாங்கள் தங்கியிருந்து இளைப்பாற மடமொன்று கட்டினர்கள். அதுவே செட்டியார் மடமாகும். முதன்முதல் கட்டிய மடமும் அதுதான்! 1873ல் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் பெரிய கோவிலுக்குச் சுற்றுமதில் கட்டினர்கள். இதன் பிறகு 1915-ம்வருடம் மட்டக்களப்பு மார்க்கண்டு என்பவர் தனது பெயரால் மடம் கட்டினர். அதுவே மார்க்கண்டர்மடமாகும். இதன் பிறகே ஒவ்வொரு இனத்தவரும் தெருவீதியின் இருமருங்கிலும் காணிகளை விலைக்கு வாங்கி மடங்களைக் கட்டினர்கள்.

1887-ம் ஆண்டில் கதிர்காமம் செல்வோருக்கு அரசாங்கம் ஓர் உத்தரவு பிறப்பித்தது: கதிர்காம யாத்திரை செய்வோர் ஒவ்வொருவரும் ஆங்காங்குள்ள அரசாங்க அதிபரிடம் (பர்மிட்) உத்தரவுப்பத்திரம் பெறவேண்டுமென்ற சட்டம் ஏற்பட்டது. இந்தச் சட்டம்பல சைவசமயப் பெரியார்ர்களின் முயற்சியால் 1922-ம் வருடம் கதிர்காமம் போய்வர ஆரம்பித்தார்கள். திரையிட்டு மறைக்கப்பட்ட கோவிலில் தீபாராதனை செய்வதைப் பார்க்க முடியாத பக்தர்கள் தங்களின் மடங்களின் முன் மண்டபப் படிகள் வைத்து சுவாமி வீதி வலம் வரும் போது தீபதூபங் காட்டி வழிபட்டனர். பின்னர் ஜனக்கூட்டம் பெருகப் பெருக மடங்களின் பக்கங்களிலும் கப்புராளை மார்களின்வீட்டின் முன்பக்கங்களிலும் கடைகள் வைக்க இடம் கொடுத்தார்கள். இக்கடைகளுக்குத் திருவிழாக்காலத்திற்கு மட்டும் ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகையாக அறவிடப்படும்.

இந்தக் கடைகளை அப்புறப்படுத்தவேண்டும். அப்படியானல் மடங்களும் கப்புராளைமார்விடுதிகளும் பழைய நிலையில் பரிசுத்தமாக இருக்கும். ஆராதனைக்கு வேண்டிய பொருள்களைகூட அரசாங்கமே கூட்டுறவு முறையில் மக்களின் நலன்கருதி விற்பனைசெய்யலாம். புத்தல் பாதையில் கிடைக்கும் காட்டை அழித்து சிறந்த நகரொன்றையே செப்பனிடலாம். அதனல் கோவிலும் மடங்களும் கப்புராளைகளின் வீடுகளும் எவ்வளவோ பரிசுத்தமாக இருக்கும்.

தெய்வீக ஸ்தலத்தில் செய்யக்கூடியவற்றைத்தான் செய்ய வேண்டும். எல்லா மதத்தவர்களும் கதிர்காமம் சென்று வழிபடுபவர்களாயினும் குறிப்பாக ஒரு சாராரின் மதவிஷயத்தில் பாகுபாடு.காட்டுவது சரியல்ல.

ஆகவே இலங்கை வாழ் சேவை மக்கள் பிரிவினைகாட்டாது முழுமூச்சாகப் பங்கு கொண்டு, மடங்களை அப்புறப்படுத்தலாகாது என ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

— எஸ். எஸ். நாதன்

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைவானெலியில் இந்த பிரசங்கங்களை அப்படியே ஆங்கிலத்தில் அஞ்சல் செய்தால் எவ்வளவு மேலாக இருக்கும். ஆனல் வானெலியின் ஆங்கில ஒலிபரப்பு மட்டுமல்ல, இங்குள்ள ஆங்கிலப் பத்திரிகைகளிலும்கூட, இந்து சமய விஷயங்களை அநேகமாக பகிஷ்கரித்து விடுகின்றன என்று மனக் கசப்புடன் கூறுகிறர் ஒரு நண்பர்.

வாழ்க்கைக்கு வழி காட்டக்கூடிய பகவத்கீதை இந்துக்களுக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே பயன்படும் நூலாகும். இதை ஆங்கில பத்திரிகைகளும், வானெலி ஆங்கிலப் பகுதியும் உணர்ந்தால், இப் பிரசங்கங்களை அலட்சியபபடுத்தி ஒதுக்கமாட்டா! இந் நிலை சீக்கிரத்தில் மாற இறைவனே அருள் செய்ய வேண்டும்.

## அவசர காலத்தை வாபஸ் பெறுக

கொழும்பு, திங்கள்

அவசரகாலச் சட்டத்தையும் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தையும் வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானங்கள் தபால், தந்தி ஊழியர் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றன.

பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தபால் சேவைகள் அத்தியாவசியமற்ற சேவையாக மாற்றப்பட வேண்டும்.

தபால், தந்தி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உடைகளுக்கான அலவன்ஸையும் 50 சதவீத அதிகப்படியான சம்பளத்தையும் மீண்டும் வழங்கவேண்டும். 4 சதவீத தேசிய அபிவிருத்தி வரியை ரத்துச் செய்யவேண்டும்.

தந்தி, தபால் காரர்களுக்கு இலவசமாக சப்பாத்துகள் வழங்கப்படவேண்டும். போஸ்ட் மாஸ்டர், சிக்னலர் பரீட்சைகளில் தந்தி, தபால் காரர்கள் பங்குபற்றக் கூடிய விதத்தில் பிரத்தியேக சோதனை நடாத்தப்பட வேண்டும்.


## ஏஜண்டுகள் தேவை

ஈழநாடு தினசரிப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு அடியில் கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | |
|---|---|
| பத்தனை | ரத்தட்டை |
| கடுகஞ்சேனை | கட்டுகாஸ்தோட்ட |
| டைகாமம் | மாவத்தகம |
| அக்ரப்பத்தனை | குருணகலை |
| தலவாக்கெலை | பண்டாரவளை |
| ரம்படை | வெலிமடை |
| வட்டகொடை | ஹப்புத்தல |
| கந்தகெதர | கொசலாந்தை |
| ஹாலிஎல | |

விபரங்களுக்கு:

**ஜெகஜோதி அன் கோ.,**
14, திருக்கோணமலை வீதி, கண்டி.

# கூட்டுறவால் நாடு சுபிட்சமடையும்

## நீர்வேலியில் காரியாதிகாரிபேச்சு

நீர்வேலி, திங்கள்

"கூட்டுறவுமுறை பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது. இதனுல் கிராம வாழ்க்கை முறையில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது. இந்த ரீதியில் மக்கள் அதிகம் உணர்ந்தால் விரைவில் நாடு சுபீட்சமடையும்".

இவ்வாறு நீர்வேலியில் புதிதாக அமைக்கப்பட்ட பாய் நெசவு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை கூறினர். கிராமாபிவிருத்தி குடிசைக் கைத்தொழில் பகுதியதிகாரி திரு. எல். ஜி. இராசரத்தினம் புதிதாக மக்கள் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட தெருவைத் திறந்து வைத்ததோடு, பாய் நெசவையும் ஆரம்பித்து வைத்தார்.

திரு. சபாபதிப்பிள்ளை மேலும் பேசியதாவது— வறுமையையும் ஏற்றத் தாழ்வுகளையும் நீக்குவதற்கு நாட்டில் பொருளாதார சமூக மாறுதல்களைச் செய்வதற்கு கூட்டுறவு முறைதான் ஏற்றது. நீர்வேலி கூட்டுறவு முறையில் மற்றைய கிராமங்களுக்கோர் முன்மாதிரியாகத் திகழ்வதை பாராட்டவேண்டும். பயிற்சிபெற்ற கூட்டுறவு ஊழியர்கள் கிராமங்களுக்குச் சென்று பெருமளவில் கூட்டுறவு முறையை மேற்கொள்ள மக்களுக்கு உதவவேண்டும்.

கூட்டத்தில் திருமதி வேதவல்லி கந்தையா உட்பட இன்னும் பலரும் பேசினர்.

## பெண்ணை தாக்கியதாக வழக்கு

மாவிட்டபுரம், திங்கள்

தையிட்டியைச் சேர்ந்த கதிரன் பெண் மாரீசை என்பவரை தாக்கிப் படுகாயம் உண்டுபண்ணியதாக அதேயூரைச் சேர்ந்த வைரவன் கட்டையன் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த வயிரவன் செபமாலை ஆகிய இருவர் மேலும் காங்கேசன்துறைப் பொலிசார் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி வெள்ளீ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இரு எதிரிகளையும் தலா ரூபா 500 பிணையில் செல்லும்படியும் நவம்பர் 10-ந் தகதி கோட்டிற்கு வரும்படியும் நீதிபதி கட்டளையிட்டார்.

## "மாணவர் ஈழத்து படைப்புகளை அறிந்திருத்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"இன்றைய மாணவர்கள் ஈழத்தின் எதிர்கால இலக்கியத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாவர். இலக்கிய மேதைகள் பலர் இவர்களுக்கிடையே தோன்றுவார்கள். இதற்கு மாணவர்கள் ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் நன்கு அறிந்திருக்கவேண்டும்."

இவ்வாறு இலங்கை சாகித்திய மண்டல பரிசுபெற்ற சிறுகதை எழுத்தாளரான திரு. டொமினிக் ஜீவா தமக்கு சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விடுதி மாணவர்களால அளிக்கப்பட்ட பாராட்டுக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசும்போது கூறினர்.

கூட்டத்துக்கு திரு. என். தருமலிங்கம் தலைமை வகித்தார். இன்னும் பலர் பேசினர்.

## தோட்டப் பிள்ளைகளுக்கு கட்டாயக்கல்வி

புசல்லாவ, ஞாயிறு

"திராவிட மக்களாகிய நாம் அனைவரும் நமது வருங்காலச் சந்ததிகளின் நன்மையைக் கருதி தற்போது தோட்டப் பகுதியில் வசிக்கும் பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும்".

இவ்வாறு சோமவத்தை நடுககணக்கு தோட்டத்தில் இலங்கை திராவிடமுன்னேற்ற கழக கிளைத் திறப்புவிழாக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் புசல்லாவை மாவட்ட தி. மு. கழக செயலாளர் கு கருப்பையா கூறினர்.

மேற்படி கிளைதிறப்பு விழாக் கூட்டத்தில் ஏராளமான தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

செயலாளர் மு. செல்லப்பன் துணை செயலாளர், அ. தங்கவேலு பொருளாளர், கி. ராமசாமி செட்டியார் துணை பொருளாளர், ம. பாக்கியநாதன விளம்பர செயலாளர், முத்து கருப்பன் துணை விளம்பர செயலாளர், வி. இராமசாமி.

## கதிரியக்கம் பரவுவதை கட்டுப்படுத்த ஏற்பாடுகள்

ஹாம்பார்க், அக். 30

அணுக்குண்டு சோதனைகள் சென்ற மூன்று வருடங்களாக நிறுத்தப்பட்டு விட்டதினுல் மேற்கு ஜெர்மனியில் கதிரியக்க சிதறலைக் கண்டுபிடிக்க வைக்கப்பட்டிருந்த கருவிகள் வேலை செய்ய வாய்ப்பில்லாமலிருந்தன. ஆனல் இப்போது ரஷ்யா மீண்டும் அணுக்குண்டு சோதனையிலீடுபடவே இக்கருவிகள் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன.

மேற்கு ஜெர்மனியில், காற்றிலும், தண்ணீரிலும், பூமிசத்திலும், உணவிலும், கதிரியக்க வீச்சு கலக்காமல் இருப்பதைத் தடுக்க ஏராளமான ஆராய்ச்சி மனைகள் வேலை செய்துவருகின்றன. மத்திய அரசாங்கத்தின் ஆதரவில் 19 ஆராய்ச்சி மனைகளும் ராஜயங்களின் பொறுப்பில் 18 ஆராய்ச்சிமனைகளும் இப்போது இப்பணியில் ஈடுபட்டுள்ளன. இன்னும் 9 கட்டுப்பாடு நிலையங்களும் நிறுவப்படவிருக்கிறது. ஜெர்மன் அணு உலைநிலையத்தின் அருகில் கதிரியக்கக் கட்டுப்பாடு வேலைகளைக் கவனிக்க மட்டும்14நிலையங்கள் உள்ளன.

1955லேயே கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்தும் வேலை சட்டபூர்வமாகவே செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் கதிரியக்க வீச்சை அகற்றுவதற்காகவென்றே 11 அளவு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தண்ணீரில் கதிரியக்க வீச்சு கலந்திருப்பதைக் கண்டறிய பரிசோதனைகள் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன. ஜெர்மனிக்கருகிலுள்ள வடகடலில் கதிரியக்கம் கலந்துள்ளதைக் கண்டறியும் பொறுப்பு ஹாம்பர்க்கிலுள்ள ஜெர்மன் நீர் ஆராய்ச்சிக் கழகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பால், உணவு, மீன் இவைகளில் கதிரியக்க வீச்சு கலக்காமல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய பல பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

## சமய வகுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொட்டடி இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தினர் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை சமயவகுப்பொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள இந்து மாணவர்களுக்கு சமய அறிவைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இந்த வகுப்பை நடத்துவதென்றும் வருடமொருமுறை சமயப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறும் மாணவருக்குப் பரிசுவழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## "நான் ஒரு சதிக்காரனல்ல தவறுகளைக் கூறுகிறேன்"

—திரு. டட்லி

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செய்த 'அபூர்வ' அபிவிருத்தி என்னவெனில் இந்த நாட்டின் சனத்தொகையைப் பெருக்கியதே.

இவ்வாறு யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா . ஹைட்பார்க்கில் நடைபெற்ற இளைஞர் மகாநாட்டில் பேசுகையில்தெரிவித்தார்.

திரு. டட்லி மேலும் தெரிவித்ததாவது:

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகிறது. ஆனல் அரசாங்கம் புதுப்புதுக் கட்டங்களைத்தான் இயற்றிவருகிறது.

இந்த நாட்டின் முதலாவது சதிகாரன் என என்னைச் சிலர் கூறியுள்ளனர். ஆனல் எந்தச் சதி ஆலோசனையிலும் நான் ஈடுபடவில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் அரசாங்கத்தின் தவறுகளை நான் மக்களுக்கு எடுத்துக் கூறிவந்துள்ளேன்.

சீனி, மாவு, பாண், சிகரெட்டுகள் நெருப்புப்பெட்டி ஆகிய பொருள்களின் விலையை அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இப்பொழுது சம்பளவெட்டில் ஈடுபட்டுள்ளது.

ஒவ்வொரு மந்திரிக்கும் 45,000 ரூபா செலவில் வீடு கட்டப்பட்டு வருகிறது. யு. என். பி. பதவிக்கு வந்தால் யு. என். பி. மந்திரிகள் இந்த வீடுகளில் வசிக்கலாம் எனச் சில மந்திரிகள் கூறினர்கள். பொது மக்களின் பணத்தை அநியாயமாகச் செலவு செய்து கட்டப்பட்ட இந்த வீடுகளில் எனது மந்திரிகள் ஒருவராவது நுழையாதவாறு நான் பார்த்துக் கொள்வேன்.

அவசரகாலச் சட்டம் மூலமாக அரசாங்கம் நாட்டை ஆட்சி செலுத்துகிறது. அரசாங்கத்தின் அநீதிகளை எதிர்த்து மக்கள் எழுந்து விடுவார்களே என்ற பயம் காரணமாகவே இவ்விதம் செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் யு. என். பி. கட்சிபதவிக்கு வந்தால் அந்த அரசாங்கம் இராணுவ ஆட்சி செலுத்தாது. அது ஜனநாயகமாக அரசாங்கமாகவே இருக்கும். பொது மக்களின் விருப்பத்துக்கிணங்கவே யு. என். பி. அரசாங்கம் ஆட்சி செலுத்தும்.

## சாரதியின் சுகவீனம்!

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி ஒருவருக்கேற்பட்ட சுகவீனம காரணமாக, இங்கு இரு தினங்களாகத் தபால் விநியோகம் நடைபெறவில்லை!

மாங்குளம் ரயில் நிலையத்திலிருந்து சனிக்கிழமையன்று தபால்பைகள் எடுத்து வர வேண்டிய பஸ்ஸின் சாரதி திடீரென மாங்குளத்தில் சுகவீனமுற்றதால், வேறொரு சாரதியினுல் அவை கொண்டு வரப்பட்டன. 7 மணி நேரம் பிந்திவந்த தபால்கள், அன்று விநியோகம் செய்யப்படவில்லை. அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமையும் விநியோகம் நடைபெருமல், இருதினங்களின் பின், திங்களன்றுதான் விநியோகிக்கப்பட்டன.

## வடமராட்சி தமிழாசிரியர் சங்கம்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சித் தமிழாசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றைய தினம் சங்கத் தலைவர் திரு. சி. இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இச்சங்கத்தை தொகுதி அடிப்படையில் பருத்தித்துறை, உடுப்பிட்டி என இரண்டாகப் பிரிக்கும் யோசனை கைவிடப்பட்டு தற்போது இருப்பதுபோல் ஒரே சங்கமாகவே இயங்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாக திருவாளர்கள்: சி இ. கந்தசாமி, ஆ. க. மாணிக்கம், அ. கதிர்காமத்தம்பி, ஆகியோர் முறையே தலைவர், காரியதரிசி, தனதிகாரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கிணற்றில் விழுந்து பெண் மரணம்

முள்ளியவளை, திங்கள்

ஐந்து பிள்ளைகளின் தாயாரான அருணசலம் அன்னம்மா என்னும் 40 வயதுப் பெண், தனது வீட்டிலுள்ள கிணற்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டதைத் தொடர்ந்து, முள்ளியவளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கோ. குட்டித்தம்பி விசாரணை நடத்தினர்.

காலஞ்சென்றவர், கடந்த சில ஆண்டுகளாகச் சித்தசுவாதீனமின்றி இருந்ததாகவும், சம்பவம் நடந்த சமயம், கணவன் வயலுக்கும், பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கும் சென்றிருந்ததாகவும், தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

சாவகச்சேரி, ஞாயிறு

கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்து 40 வருடம் கடமையாற்றி இளைப்பாறிய திரு. க. சரவணமுத்துவுக்கு பிரிவுபசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

மன்னர், ஞாயிறு

மன்னர் உதவி ஸ்டேஷன் மாஸ்டராயிருந்த திரு. ஏ. கே. ஆறுமுகம்தம்பி 1962 ஜனவரி மாதம் முதல் தலைமன்னர் ஸ்டேசன் மாஸ்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

சொந்த விற்பனை விநியோகஸ்தர்கள்:

- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்.
- எச். ஏ. பகஸ்நாவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

# புத்தரின் படத்துக்கு இலங்கையில் தடை

கொழும்பு, ஞயிறு

'புத்தரின் வாழ்க்கை' என்ற ஜப்பானியசினிமாப்படத்துக்கு இலங்க அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பௌத்தய் தத்தினரின் மன உணர்ச்சியை இப்படம் பாதித்துவிடும் என்ற காரணத்திலேயே இப்படத்தை இங்கு திரையிடுவதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சினல் வெளியிடப்பட்ட அறிக்கை இதுபற்றித் தெரிவிப்பதாவது:

டேயர் ஸ்டுடியோவினல் தயாரிக்கப்பட்ட 'புத்தரின் வாழ்க்கை' என்ற ஜப்பானிய படத்தில் வரும் காட்சிகள் சமயசம்பந்த மற்றதாகவும் ஆட்சேபிக்கக் கூடிய காட்சிகள் கொண்டதாகவும் பௌத்தர்களுக்கு கேடு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது என ஜப்பானிலுள்ள இலங்கை ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

மற்றைய நாட்டு ஸ்தானிகர்களுடன் இலங்கை ஸ்தானிகரும் இப்படத்தை முற்றிலும் தடை செய்யுமாறு ஜப்பானிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். அவ்வாறு முற்றிலும் தடை செய்யாவிடினும் தவிர்க்கவேண்டிய காட்சிகளையாவது நீக்குமாறு ஜப்பானிய அரசாங்கத்தை ஸ்தானிகர்கள் கேட்டுள்ளனர். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்குள்ள பௌத்த மதத்தவர்களின் உணர்ச்சிகளை இது பாதிக்கும் என்பதால் இப்படத்தை இங்கு காண்பிக்காதவாறு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

## சமய அறிவு பெருக விழாக்கள் அவசியம்

தொல்புரம், திங்கள்

"சைவமும் தமிழும் தழைத்தோங்கவும், தமிழகத்தில் பிற சமயங்கள் நிலைபெறத் தொடங்கிய காலத்தில் சைவத்தின் பெருமையை எடுத்துரைத்துச் சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர்களும் நாயன்மார்களே. அவர்களது குருபூசை விழாக்களைத் தவருது கொண்டாடுவதின்மூலம் இளைஞர்களிடையே இறைபக்தியையும், சமய அறிவையும் வளர்க்க முடியுமென்பது திண்ணம்."

இவ்வாறு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்திறுகரவில் தொல்புரம் அ. மி. பாடசாலை மண்டபத்தில் பிரதி வெள்ளிக் கிழமைகளில் நடக்கும் சமய வகுப்பு, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது தலைமைவகித்துப் பேசிய ஆசிரியர் திரு. நா, முருகையா குறிப்பிட்டார்

ஆசிரியர் திரு. கே. கிருஷ்ணரும் பேசினர் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

## இலவச சமய தீட்சை

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை பொதுசன சேவாசங்கத்தின் சார்பில் நவம்பர் மாதம் 3-ம் திகதி நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் இலவச சமய தீட்சை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 31-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 சிரோன்மணி பொவனுத்துரை - பாட்டு, 7-45 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 10-00 நாகஸ்வரம்ச்,

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-0. வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எம். ஆர். கீதாமணி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 திருவாரூர் டி. விநயசிவராயம் - பாட்டு, 9-15. 'எதுவும் போய்விடவில்லை' சிறுகதை, 9-30 மெல்லிசை. 9-50 நூல்மதிப்புரை.

# 'முத்தமிழையும் கண்டவன் தமிழன்'

பண்டிதர் இரத்தினம்

# 'கலை என்று சொல்லும் அளவுக்குசினிமாகலைஉயரவில்லை'

—அகிலன்

## காரைக்குடிவிழாவில்அறிஞர்உரை

காரைக்குடி, அக், 30

"பிறர் தனித்தனியாகக் கண்ட இயல், இசை, நாடகத்தை மொழியோடு முத்தமிழாய்க் கண்டான் தமிழன். அழிவுக்குப் பயனபடும் அறிவு எத்துணை கூர்மையுடைத்தாயினும் அதனல் பயனில்லை. அறிவும் அதன் பயனும் சிறப்புற பண்பாடும் அப்பண்பாட்டுக்களையும் இன்றியமையாதன".

இவ்வாறு காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பேரவையின் கலைவிழாவை வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்துப் பேசும்போது பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் கூறினர். முதல்நாள் நிகழ்ச்சிகள் காலையில் அழகப்பா கல்லூரி அறநிலையச் செயலாளர் திரு க. வெ. சித. வெ. வேங்கடாசலம் தலைமையில் ஆரம்பமானது.

திரு. இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது ;—

பண்டைக் காலந்தொட்டே எண்ணற்ற இடையூறுகளுக்கிடையில் தமிழினம் நிலைத்திருப்பதற்குக் காரணம் அழகப்ப வள்ளல் போன்ருேரின் கொடைப்பண்பே. இதனை உணர்ந்து முத்தமிழரங்கு நடத்தும் அழகப்பா கல்லூரி பேரவையினரைப் பாராட்டுகிறேன். இவர்களைப் பின்பற்றி எல்லாக் கல்லூரிகளும் கல்லூரி விழாக்களைக் கொண்டாடி முத்தமிழையும் வளர்க்க முன்வருதல் வேண்டும். மக்கள் தாய்வழியாகவும் தந்தை வழியாகவும் பிரிவது போல் மொழிவழியாகவும், நாடு வழியாகவும் பிரிவது இயற்கை. தாயை மறந்திருக்கும் சேயை, தாயைப் போற்றுஎன்று கூறுவதுபோலத்தான் தமிழை மறந்திருக்கும் தமிழர்களைத் தமிழைப் போற்றுங்கள் என்று சொல்கிறோம். உலகெல்லாம் பரந்துகிடக்கும் தமிழ் மக்களைத் திருக்குறள் பெயராலும் திருவள்ளுவர் பெயராலும் ஒன்றுபடுத்த முயல்கிறோம். இதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளோம். திருவள்ளுவர் நாளுக்கு தமிழ் நாட்டு அரசாங்கம் விடுமுறை அளிக்கச் செய்தபிறகு எல்லோரும் முயலல் இன்றியமையாதது.

திரு. க. வெ. சித. வெ. வெங்கடாசலம் தமது தலைமையுரையில் நினைத்தவுடன் மகிழ்வு தருவதுதான் கலை என்றும் மாணவர்கள் ஒழுக்கம், அறிவு, கலைத்தேர்ச்சி, நிரம்பப் பெற்று அழகப்பருக்கும் தங்கள் கல்லூரிக்கும் பெருமை தேடித்தர வேண்டும் என்று கூறினர்.

### வாழ்க்கைக்கலை

சிறப்புரையாற்றிய திரு. அகிலன் "வாழ்க்கைக்கலை" என்ற தலைப்பில் பேசுகையில் கூறியதாவது:

கற்றவர்களை உருவாக்குதலே உலகிற்குச் செய்யும் சிறந்த பணி. இக்கல்விக்கூடங்களை நிறுவியதன் மூலம் அழகப்பர் உலகிற்குப் பெரும் பணி செய்துள்ளார். பல இடையூறுகளையும் தாங்கி வாழ்வதே கலை வாழ்வாகும். மகிழ்ச்சி, இன்பம், அமைதி இவைதான் வாழ்க்கையின் குறிக்கோள். மாணவர்கள் தேர்வுக்காக மட்டும் கற்காது வாழ்க்கைக்காகவும் கற்க வேண்டும். தமிழர்கள் சொல்லில் மட்டும் வல்லபர் அல்லர்! கல்வியே கலைபொழியும் செயலிலும் வல்லபர் என்பதைத் தமிழ்நாட்டுப் பெரும் பெரும் கோபுரங்கள் காட்டுகின்றன. தமிழில் புத்தம்புது இலக்கியங்களும், அறிவு நூல்களும் தோன்றினல்தான் தமிழ்மொழி முன்னேறும். ஆழ்ந்த உணர்வும், சிறந்த அறிவும் சான்ற இளைஞர்களே சிறந்தோர் சமுதாயத்தை சமைக்க முடியும். பெற்ற விடுதலையைப் பேணிக்காக்க மாணவர்கள் தொழிற்கல்விகளில் சிறக்க வேண்டும். செல்வம் மட்டும் நிறைந்திருந்தால் அமைதி கிடைக்காது. அகமற்றபுறம் நிலையற்றது, அஞ்சத்தக்கது. அமெரிக்காவும் ரஷ்யாவும் செல்வத்தால் சிறந்திருப்பினும்அங்கு அமைதியில்லை. அச்சமே குடிகொண்டிருக்கிறது.

### தமிழகத்தில் சினிமாக்கலை

தமிழகத் திரைக்கலையின் தரம் கலை என்ற அளவிற்கு உயரவில்லை. அது மக்களை உயர்த்த முயல்வதில்லை. தாழ்ந்த நிலையிலேயே வைக்க முயல்கிறது. ஆனல் உலக நடிகர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறந்த நடிகர்கள் சிலரைத் தோற்றுவித்தனம் திரைப்படத் தொழிலையே சாரும். திரைத்தொழிலுக்கிருக்கும் புகழும் சிறப்பும் பிறதொழில்களுக்கு இருப்பின

(8-ம் பக்கம் பார்க்க)

## கம்போடிய பிரதமர் எச்சரிக்கை

நொம்பென், அக். 30

"சிநேகமற்ற நடவடிக்கைகளில் மேற்கு நாடுகள் ஈடுபட்டுள்ளபோதிலும் அவைகளுடன நட்புறவுடன் வாழவே கம்போடியா விரும்புகிறது" என்று கம்போடிய பிரதமர், இளவரசர் தொரடம்சிகானுக் குறினர்.

தாய்தந்து, தென்வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா பெருமளவில் ராணுவ உதவியளிப்பதை இளவரசர் சிகானுக் குறிப்பிட்டு அமெரிக்காவின் நடவடிக்கை, கம்போடியா தொடர்ந்தும் நடுநிலைமை நாடாக இருக்கவேண்டியது அவசியமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ள தென்றுர்.

இதே நிலைமை நீடிக்குமானல் மேற்கு நாடுகளின் பகைவர்களிடம் கம்போடியா உதவி கோரவேண்டி யேற்படும் என்று இளவரசர் இகானுக் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணக் கல்லூரி நூலக அதிபர் ஓய்வுபெறுகிறர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்து நூலகர் சங்கத்தின் தலைவரான திரு. கே. செல்லையா யாழ்ப்பாணக் கல்லூரி நூலக அதிபர் பதவியிலிருந்து இவ்வருட இறுதியில் இளைப்பாறுவார் எனத் தெரிகிறது.

சிறந்த நூல்களை இந் நூல்நிலையத்தில் சேகரித்துவைத்துப் பாதுகாத்தது மாத்திரமல்ல எழுத்தாளர் பலருக்கும் மிகவும் உதவியாகவும் இருந்து தொண்டாற்றியிருக்கிறர்.

## கல்லூரியின் 75வது ஆண்டுதினம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் 75வது வருடாந்த தினம் இவ்வாரம்கொண்டாடட்படும்.


ஒருபோதும் கிடைக்காத மிகச் சிக்கனமான

பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்



சமையல் அடுப்பு - 20U —2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடவசதியுண்டு. போர்ஸலேன் மேற்புறம். கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். கால் 2 கலன், இனாமல் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு - 27U —2 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப்போக்கிகள். 2 காலன். இனால் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும் நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு - 37U —3பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைபோக்கிகள். 2 காலன் இனால் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு CWE சி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஸி.டப்ளியூ.ஈ. கடை, மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்.

K. W. 48

# கல்லூரி போதனை மொழியை மாற்றும் பிரேரணை தோல்வி

புசல்லாவை, ஞாயிறு

புசல்லாவையிலுள்ள இரு பாடசாலைகளை சிங்களப் பாடசாலைகளாக மாற்ற வேண்டுமென்ற பிரேரணை புசல்லாவை நகரசபைக் கூட்டத்தில் தோல்வியடைந்தது.

நகரசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. ஏ. டி. வில்பிரட் பெரேரா தலைமையில் நடைபெற்றது.

புசல்லாவையிலுள்ள பரிசுத்த திருத்துவக் கல்லூரியையும் சி. சி. கலவன் பாடசாலையையும் சிங்களப் பாடசாலைகளாக்க வேண்டுமெனக் கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்றைத் திரு. ஈ. எம். குணவர்த்தன கொண்டுவந்தார்.

பிரேரணையை ஆதரித்து திரு. பி. டி. பொடிசிங்க அப்புகாமி பேசியபின்னர் திரு. எம். கதிரவேலு அதை எதிர்த்துப் பேசியதுடன் திருத்தப் பிரேரணையொன்றையும் கொண்டு வந்தார்.

திருத்துவக் கல்லூரியில் சென்ற முப்பத்தொரு வருடங்களாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கல்வி போதனை நடைபெற்று வருவதாக திரு. கதிரவேலு தெரிவித்தார்.

இக்கல்லூரியில் தமிழ்மாணவர்கள் 600 பேர்களும் சிங்கள மாணவர்கள் 400 பேர்களும் கல்வி கற்று வருவதாக அவர் கூறினார். இப்பொழுதுள்ளதில் மாற்றம் செய்யக்கூடாதென அவர் கேட்டுக் கொண்டார்.

திரு. கதிரவேலுவின் திருத்தப் பிரேரணையை சபைத் தலைவர் திரு. ஏ. டி. வில்பிரட் பெரேரா ஆதரித்துப் பேசினார்

இக்கல்லூரிகள் இப்பொழுதுள்ளதுபோல் இரு மொழிகளையும் கொண்ட கல்லூரியாகவே தொடர்ந்து இருக்க வேண்டுமெனக் கல்வி அமைச்சரையும் கல்வி அதிகாரியையும் கோர வேண்டுமென தலைவர் கேட்டுக்கொண்டார்.

திரு. கதிரவேலுவின் திருத்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

## அட்லாண்டிக்கில் கதிரியக்கம்

லண்டன், அக். 30

சமீபத்தில் ரஷ்யா வெடித்த அணுக் குண்டினல் ஏற்பட்ட கதிரியக்கம் கனடாவைக் கடந்து, அட்லாண்டிக்குக்கு மேல் மணிக்கு 80 மைல் வேகத்தில் சஞ்சரித்து வருவதாயும் இவ்வாரம் ஐரோப்பாவை அது அடையுமென்றும் விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!


கிங்ஸ்லி (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு)

திரை உலகத்திற்கே ஓர் இலக்கணம் வகுக்கும் திரை ஒவியம்



மனோஹர், தேவிகா

எல். விஜயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன்

நடித்த

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

பாஞ்சாலி

மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக் கிணங்க

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

பராசக்தி

# 1,000 ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்

கொழும்பு, திங்கள்

ஒவ்வொரு வருடமும் 1,000 ஏழைமாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழக்குமாறு தேசிய கல்விக் கமிஷன் சிபார்சுசெய்யுமெனத் தெரிகிறது.

8-ம்வகுப்புக்கும் பல்கலைக் கழக வகுப்புக்கும் இடையிடையில் பயிலும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குமாறு கருத்து வெளியிடுமெனத் ெரிதகிறது.

## சகல மதத்தவருக்கும் சமமான கல்வி

சிலாபம் திங்கள்

சகல மத தினரையும் சமமாக நடாத்துவோம். எவ்வித பாரபட்சமும் காட்டது ஒவ்வொரு மாணவனும் தனது சமய சூழலில் கல்வி பயில்வதற்கான வழிகளைச் செய்ய முயற்கிப்போம்ம்.

இவ்வாறு கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் இங்குள்ள மகாவித்தியாலயத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது றினர். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபொழுது சமயக் கல்வியை அரசாங்கம் அழித்துவிட்டதாகப் பலர் கூக்குரலிட்டார்கள். ஆனல் சகல சமய மாணவர்களுக்கும் சமமான கல்வியைப் போதிக்க இந்தத்திட்டமே ஏற்றது என இப்பொழுது மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

சமயக்கல்வி நாட்டில் நிலவி வருமா எனச் சிலர் இன்றும் சந்தேகப்படுகின்றனர். அவர்களுக்கு நான் கூறுவது இதுதான். திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கம் எல்லா மதத்தினரையும் சமமாகப் பேணி நடத்தும் என்பதே"

—

கொழும்பு, திங்கள்

இலங்கை தொழிலாளர் சம்மேளனம் அடுத்தமாத இறுதியில் தனது வருடாந்த மகாநாட்டை நடாத்தவிருக்கிறது.

இம் மகாநாட்டுக்கு வெளிநாட்டு தொழிற் சங்க அங்கத்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். பல தொழிற் சங்க அங்கத்தவர்கள் இம் மகாநாட்டில் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சூடு விழுந்ததும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வும் நல்லதம்பி மேலும் கூறினர்.

இச்சம்பவத்தைப் பார்ப்பதற்காக தான் மீண்டும் மல்லாக வந்தபோது தன்னுடன் பலர் சேர்ந்து வந்ததாகவும் ஆனல் தான் இச்சம்பவத்தை நேரில் கண்டதாக அவர்களில் ஒருவருக்கும் கூறவில்லையெனவும் நல்லதம்பி தனது சாட்சியத்தில் மேலும் கூறினா. 15-ந்திகதி வரை மேல்விசாரணையை நீதவான் நவம்பர் மாதம் 15-ம் திகதி வரை ஒத்திவைத்தார். திரு. ஜிம்மி இராசரத்தினம் திரு. எஸ். பாலசிங்கம், திரு. எஸ், நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு செரும்பிம் எதிரிகள் தரப்பில் ஆஜரானர்.

பிராசிக்கியூஷன் தரப்பில் சுன்னகம் பொலிசாரின் உதவியுடனும் வழக்கறிஞர் வி. செல்லத்துரையின் அனுசரணையுடனும் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

## 'முத்தமிழையும்...

(7ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்டில் பஞ்சமும் பட்டினியும் நிலவாது.

தொடக்கத்தில் மாணவர் தலைவர் திரு. பழனியப்பன் அனைவரையும் வரவேற்றார் இறுதியில் மாணவச் செயலாளர் திரு. பெரியசாமி நன்றி கூறினர்.

# கருத்து வேற்றுமை நீங்க நேரு விஜயம் பயன்படும்

## அமெரிக்க அதிகாரிகள் கருத்து

வாஷிங்டன், அக் 30

இந்திய பிரதம மந்திரி நவ 5-ந் திகதி இங்கு வருகிறார். இரு தேசங்களுக்குமுடையே நேருவின் விஜயம் கருத்து ாவற்றுமைகளை நீக்க உதவுமென்று உயர்தர அதிகார வட்டாரங்கள் நம்புகின்றன.

இவ்வருஷ ஆரம்பத்தில் கென்னடி பதவி ஏற்றபோது உறவு ரொம்ப நன்ருக இருந்தது. ஆனல் சமீப மாதங்களில் இந்திய, அமெரிக்க கொள்கைகளில் வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன.

நேரு, கென்னடி இருவரும் 6-ந் திகதி சம்பாஷணை ஆரம்பிக்கிருர்கள். இதற்கு முன் 1953ல் கென்னடி இந்தோசீன செல்லும் வழியில் இந்தியாவுக்கு வந்தபோது இருவரும் சந்தித்தனர்.

நேரு விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரிகள் அளித்த பேட்டியில் அணுகுண்டு சோதனைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்ற நேருவின் கொள்கை அமெரிக்க அரசாங்கத்துக்கு எரிச்சலூட்டியிருக்கிறது என்று கூறினர். இந்தியாவின் கொள்கை ரஷ்யாவுக்கு சாதகமாக இருக்கிறது என்றும், அமெரிக்காவை மட்டும் குறை கூறுவதில் இந்தியா கவனம் செலுத்துவதாகத் தோன்றுகிறது என்றும் ஐ. நா. அசெம்பிளியில் ஐ. நா. பிரதிநிதி ஆர்தர் டீன் கூறினர்.

திறமையான கட்டுப்பாடு ஏற்பாடு இல்லாமல் தற்காலிகமாக சோதனையை நிறுத்தி வைப்பது, அமெரிக்காவினுடையது மட்டும் இன்றி இந்தியாவுட்பட எல்லா நடுநிலைமை நாடுகளுடையவும் பந்தோபஸ்துக்கு அபாயம் விளைவிக்கும் என்று கெனடி நேருவுக்கு விளக்குவார் என்று தெரிகிறது.

குறிப்பாக லாவோஸ் பற்றி இந்திய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ கிருஷ்ணமேனன் மேற்கொண்டுள்ள நிலையில் அமெரிக்காவுக்குள்ள அதிருப்தியையும் கென்னடி தெரிவிப்பார். லாவோஸின் சுதந்திரத்தையும், நடுநிலைமையையும் உத்தரவாதம் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த கட்டுப்பாடு கமிஷன் ஏற்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பமாகும்.

எனினும் இந்தக் கருத்து வேற்றுமைகளினல் இந்தியா விஷயத்தில் அமெரிக்காவின் கொள்கைமாருது.

சமீபத்தில் நடந்த பெல்கிரேட் மகாநாட்டுக்குப் பின் பல நடுநிலைமை நாடுகள் விஷயத்தில் குறிப்பாக யூகோ, கான, ஆகுய நாடுகள் விஷயத்தில் அமெரிக்க உறவில் சௌஜன்யம் குறைந்து விட்டது. ரஷ்யா மீண்டும் அணுகுண்டு சோதனைகளை ஆரம்பித்தது குறித்து அந்நாடுகளின் ஆட்சேபம் மிகப்பலவீனகாக இருந்தது கண்டு கென்னடி மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளார். ஆனல் இந்தியா விஷயத்தில் இப்படியல்ல.

இந்தியாவில் நடக்கும் பரீட்சை வெற்றி பெறுவது சுதந்திர உலகின் எதிர் காலத்துக்கு அத்தியாவசியமானது என்று யு. எஸ். சர்க்கார் வட்டாரங்கள் கருதுகின்றன. எனவே இந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கும் கணிசமான உதவி அளிக்கும் கொள்கையை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை என அவர்கள் கருதுகிருர்கள்.

### டெலிவிஷனில் தோன்றுவார்

பிரதமர் நேரு யு. எஸ்.சுக்கு விஜயம் செய்யும் போது முக்கிய மூன்று டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் தோன்றுவார்.

நவம்பர் 5ந் தேதியன்று நேரு அமெரிக்காவில் தேசிய ஒலிபரப்புக் கம்பெனி நிகழ்ச்சிகளில் நிருபர்களுக்கு டெலிவிஷனில் பேட்டியளிப்பார்.

நவம்பர் 11திகதிஅமெரிக்கன் ஒலிபரப்பு கம்பெனி நிகழ்ச்சியில் அட்லாய் ஸ்டீவன்ஸன் அறிக்கைகள் பற்றி நேரு டெலிவிஷனில் பேட்டியளிப்பார்.

கொலம்பியா ஒலிபரப்பு ஸ்தாபனமும் நவம்பர் 12திகதியன்று வாஷிங்டன் சம்பாஷணை பற்றி நேருஜியை டெலிவிஷனில் பேட்டியளிக்க அழைத்துள்ளது.

## அத்தியடி சன சமூக நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

அத்தியடி சனசமூக நிலையத்தின் ஆண்டுக்கூட்டம் அத்தியடி சனசமூக நிலைய மண்டபத்தில் முதலியார் முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட அங்கத்தினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. சிவகுமார், உபதலைவர்: திரு. எஸ். ஏதுரை, காரியதரிசி: திரு. கே. சோமசுந்தரம், உதவிக்காரியதரிசி: திரு. எஸ். கதிர்காமதாசன், தனதிகாரி: திரு. எஸ். சிவகுருநாதன், உதவி தனதிகாரி. திரு. எஸ். ஜெகநாதன், கணக்குப்பொறுப்பாளர்: திரு. எஸ். முத்துக்குமாரசாமி.

இக்கூட்டத்தில் அத்தியடி இளைஞர் இலக்கிய மன்ற உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:

தலைவர்: திரு. ஏ. ஜெகநாதன், உபதலைவர்: திரு. எஸ். ஜெகநாதன், காரியதரிசி: திரு. எஸ். சிவகுமார், உதவிக்காரியதரிசி: திரு. கே. இராஜேந்திரன்.

## கிரிக்கெட்

பூன, அக். 30

பூன டல்கலைக் கழகத்துக்கும், எம். ஸி. ஸி. கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

# நகைகளுடன் வந்த 3 இயந்திர வள்ளங்கள்

## கடற்படையினர் கைப்பற்றினர்

தெல்லிப்பழை, திங்கள்

வல்வெட்டித் துறைக்கருகில் 18,500 ரூபா பெறுமதியான மூன்று இயந்திரங்கள் அமைக்கப்பட்ட வள்ளங்கள், மகாசேன என்ற கப்பலில் லெப்டினன்ட்கமாண்டர் சண்முகரத்தினம் தலைமையிற் சென்ற கடற்படை வீரர்களினல் கைப்பட்டன.

இவ்வள்ளங்களில் 34,835 ரூபாய் பெறுமதியான நகைகளும், நகைக் சற்களும், 20,555 ரூபாய் பெறுமதியான பட்டுப்புடவைகளும் இருக்கக் காணப்பட்டன.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய சுங்க[illegible] இலாகா உதவி கலெக்[illegible] திரு. கே. திருநாவுக்கரசு வள்ளங்களுக்கு 14,000 ரூபாவும் கள்ளக் கடத்தலிற் சம்பந்தப்பட்டவர்களுக்கு 3000 ரூபாவும் அபராதமாக விதித்து, வள்ளங்களை உரியவர்களிடம் சேர்க்கவும் உத்தரவிட்டார். இந்தப் பொருள்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச்சட்ட விரோதமாகக் கொண்டுவரப்பட்டவைஎனக்கூறப்படுகிறது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.